ஐந்தாண்டு செயற்பாடு

# இயலும்


## ஸ்ரீ லங்கா



ranil2024.lk

# இயலும்
## ஸ்ரீ லங்கா

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்ரமசிங்ஹ
**Ranil Wickremesinghe**



ரணிலுடன்
நாட்டை வெற்றியடையச்
செய்யும் ஐந்தாண்டுகள்

# ஐந்தாண்டு செயற்பாடு

- தேரவாத வர்த்தக பொருளாதாரம்
- நடவடிக்கை – 2025 இற்கு அப்பால்....
- ஒளிரும் சமூகத்தை நோக்கி
- தாய்நாட்டை வெற்றிபெறச் செய்வோம்
- ஒன்றுபட்ட இலங்கை

# முடியாது...முடியாதென சொல்வதற்கு முடியாது! இயலும்....!! நான் அதைச் செய்தேன்...!!

நாட்டின் பொருளாதாரம் வெடித்துச் சிதறிய வேளை எந்தவொரு அரசியல் கட்சியோ, எந்தவொரு தலைவரோ நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலை பொறுப்பேற்கவில்லை.

நான் அதைப் பொறுப்பேற்றேன்.

அந்தக் கதையை நீங்கள் யாவரும் அறிவீர்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்ட அந்த அராஜக நிலைமை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?

கேஸ் சிலிண்டர்களைத் தோள்களில் சுமந்து கொண்டு நாள் கணக்கில் வரிசைகளில் நின்றோம். தாய் காலையில்' மகள் மாலையில்'. தகப்பன் நடுநிசியில்' மகன் அதிகாலையில்' முச்சக்கர வண்டிக்கு, வாகனத்திற்கு பெட்றோல் கொஞ்சம் நிரப்புவதற்கு இரவு முழுவதும் வாகனத்திற்குள் நித்திரை விழித்தோம். எரிபொருள் வரிசைகளில் உயிரிழப்புக்கள் கூட நிகழ்ந்தன.

சொல்வதற்கு யாரும் இருக்கவில்லை. செவிசாய்ப்பதற்கு ஒருவரும் இருக்கவில்லை. நெருக்குதலைத் தாங்க முடியாமல் மக்கள் வீதியில் இறங்கினார்கள். ஆர்ப்பாட்டம் நடாத்தினார்கள். வீடுகளுக்கு தீ மூட்டினார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களை நடு வீதியில் கொலை செய்தார்கள்.

பிரதமர் இராஜினாமாச் செய்தார். ஜனாதிபதி விலகிச் சென்றார். தம்பட்டமடித்துக் கொண்டிருந்த சகல அரசியல் தலைவர்களும் தன்னால் முடியாதெனக் கூறி மூலை முடுக்குகளில் ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

நான் யூ.என்.பியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றம் சென்ற ஒரு தனி மனிதன். இறுதியாக எனது வீட்டுக்கும் தீ மூட்டினார்கள். முழுநாடும் தீப்பற்றியது.

மீண்டும் ஒருபோதும் அமைதியான ஒரு நாட்டை, துன்பமின்றி வாழ முடியுமான ஒரு நாட்டை உருவாக்க முடியுமென ஒருவர் கூட நினைக்கவில்லை. அது ஒரு கனவாகத்தான் இருந்தது.

ஆனாலும் எப்பொழுதும் அளவு கடந்து நாட்டை நேசித்த நான், தீப்பற்றி எரியும் இந்த நாட்டைக் கண்டு ஓடி ஒளிந்துக் கொள்ள விரும்பவில்லை. உயிரைப் பணயம் வைத்து எரியும் நெருப்பில் குதித்து நெருப்பை அணைத்தேன்.

இன்று இந்த நாட்டில் மக்கள் புன்னகைப்பதைக் காணும் போது, கஷ்டத்துடன் ஏனும் மூவேளையும் சாப்பிடுவதைக் காணும் போது, முச்சக்கர வண்டி வாகனங்கள் பாதையில் செல்வதைக் காணும் போது, நீண்ட நாட்களுக்குப் பின்னர் புத்தாண்டு கொண்டாட்டங்கள், தைப்பொங்கல் கொண்டாட்டங்கள், ராமஸான் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுவதைக் காணும் போது, வெசாக் தோரணங்கள், நத்தார் அலங்கரிப்புக்கள் பாதைகளின் இரு புறங்களிலும் நிர்மாணிக்கப்படும் போது, ஆயிரக் கணக்கில் தானம் வழங்குதல்கள் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்படுவதைக் காணும் போது, நான் எல்லையற்ற மகிழச்சியடைகின்றேன்.

அன்று ஓடி ஒளித்திருந்த அரசியல்வாதிகள் இன்று வெளியில் வந்து ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்குத் தேவையான 10 பில்லியனுக்கும் அதிகமான நிதியை தேசிய பொருளாதாரத்துக்கு தேடித் தந்த என்னைத் திட்டித் தீர்ப்பதனை நான் பிரமித்துப் போய் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

ஆம்! நான் வங்குரோத்து நிலையில் இருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற்றேன். நாம் தற்போது வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு, கடன் மறுசீரமைப்பு பணிகளை நிறைவுசெய்து முன்னோக்கிச் செல்கிறோம்.

2019 இல் நான் பிரதமர் பதவியில் இருந்து நீங்கிச் சென்ற போது எமது மொத்த தேசிய உற்பத்தி 89 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஆனால் 2022 இல் நான் ஜனாதிபதிப் பதவியை ஏற்ற போது அது 76.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. அதாவது 12.1 பில்லியன் அமெரிக்க டொலர்களால் சரிவடைந்திருந்தது..

ஆயினும் 2023 இன் இறுதியில் அதனை 84.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்க எம்மால் முடிந்தது.

இவ்வாறு பயணிக்கும் இப்பயணம் தொடருமாயின் 2025 இறுதியில் அது 89 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும். அதனைத் தொடர்ந்து நாளுக்கு நாள் அது அதிகரிக்கும். மொத்த தேசிய உற்பத்தி அதிகரிக்கும் போது எமது வருமானம் அதிகரிக்கும். கொள்வனவு சக்தி அதிகரிக்கும். வாழ்க்கைத் தரம் உயர்வடையும்.

நான் தற்போது கடினமான தொங்குபாலப் பயணத்தில் நீண்டதூரம் வந்துள்ளேன்.

கடந்த காலம் பூராகவும் கடனைத் திருப்பிச் செலுத்தாத காரணத்தால் தான் உங்களுக்கு தற்போது ஓரளவு நிவாரணம் கிடைத்துள்ளதாக சிலர் கூறுகின்றார்கள். அது உண்மை அல்ல.

இக் கஷ்டமான நிலையில் நாங்கள் கடனை மீளச் செலுத்தினோம். 2022 ஆம் ஆண்டு சுமார் 2.5 பில்லியன் டொலர்கள். 2023 ஆம் ஆண்டு சுமார் 2.6 பில்லியன் டொலர்கள்.

இனி எமக்கு தொங்குபாலத்தை கடப்பதற்கு இன்னும் கொஞ்சம் தூரம் தான் எஞ்சியுள்ளது.

அதனையும் கவனமாக மற்றும் கஷ்டத்துடன் சென்று சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவதா?

இன்றேல் பொய் வாக்குறுதிகள் மற்றும் ஒவ்வொரு விதமான பரீட்சித்துப் பார்த்தல்களை நம்பி ஏமாற்றமடைந்து படுபாதாளத்தில் வீழ்வதா?

சிந்தியுங்கள்'..

மற்றுமொரு விடயம்.

நான் இவை எல்லாவற்றையும் பாராளுமன்றத்தில் தனி ஆசனம் ஒன்றின் மூலம் தான் செய்தேன்.

ஆனாலும் இப்பயணத்தை தொடர்வதற்குத் தேவையான சட்டங்கள் போன்றே திட்டங்களைத் தயாரிப்பதற்கு பல கட்சிகளின் ஒத்துழைப்பை என்னால் பெற முடிந்தது.

அதே போல் நாட்டை நேசிக்கும், பல்வேறு அரசியல் கொள்கையுடைய நீங்கள் அனைவரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினீர்கள்.

ஆகவே தான் நான் ஒரு சுயேட்சை வேட்பாளராக தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

நான் ஒரு கட்சி சார்பில் அல்லது ஒரு குழு சார்பில் இத்தேர்தலில் போட்டியிடவில்லை.

பல்வேறு அரசியல் கொள்கையுடைய உங்களது சார்பில் நான் போட்டியிடுகின்றேன்.

பழைய பரம்பரையினர் துவக்கம் நவீன பரம்பரை வரை மாத்திரம் அல்ல. பிறக்கவுள்ள எதிர்கால சந்ததியினருக்காக.

உங்களுடைய எதிர்காலத்திற்காக.

எமது தாய் நாட்டுக்காக.

ஆம்.. நான் உங்களுக்காக, நாட்டுக்காக எதிர்வரும் 5 ஆண்டுகளுள் எஞ்சியவற்றையும் செய்து காட்டுவேன்.

நாட்டை கட்டியெழுப்புவேன்..

சுதந்திரத்திற்குப் பின்னர் நூறு ஆண்டுகள் பூர்த்தியடையும் 2048 இல் கடன் சுமையிலிருந்து விடுபட்ட எமது தாய் நாடு உலகில் அபிவிருத்தியடைந்த, வளர்ச்சியடைந்த ஒரு நாடாக மாற்றமடையும்.

அப்போது நான் உயிருடன் இருக்க மாட்டேன். ஆயினும் 2022 இல் வீழ்ந்த நாட்டை தொடர்ச்சியாக மீட்டெடுத்து, எதிர்காலத்திற்காக பலமான ஒரு அத்திவாரம் அமைப்பதையே நான் இப்போது செய்து வருகின்றேன்.

இது

உங்கள் அன்பின்

இரண்டு வருடங்களுக்குள்
முழு நாட்டையும் மாற்றியமைத்த

# மிகவும் அனுபவமுள்ள அபேட்சகர்



ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, ஒரு நாட்டை மாற்றமடையச் செய்வதற்கு வாய்ப்பேச்சால் முடியாது. செயற்பாட்டால் தான் முடியும். கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் அதைச் செய்து காட்டினார்.

எரிபொருள் வரிசைகளில் சிக்குண்டு கஷ்டப்பட்ட மக்களை மிகவும் குறுகிய காலத்திற்குள் தானம் வழங்கும் தன்சால் வரிசைகளில் புன்னகையுடன் இருக்கும் நிலைமைக்கு மாற்றினார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையையும் இன்றுள்ள நிலையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

கடினமான தொங்கு பாலத்திலிருந்து இலங்கைத் தாயை கரை சேர்க்கும் பாரிய சவாலை அவர் பொறுப்பேற்றார். அப்பொறுப்பை சரிவர அவர் நிறைவேற்றினார்.

இவை அனைத்தையும் அவர் தொலைநோக்குடன் திட்டமிட்டு நிறைவேற்றினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் மேற்கொள்ளாத விதமாக புதிய சட்டங்களைக் கொண்டு வந்தார். புதிய சட்ட விதிகளை அங்கீகரிக்கச் செய்தார்.

நாட்டை சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்காக அவர் இதுவரை பாராளுமன்றத்தில் சுமார் நூற்றுக்கு அண்மித்த சட்டங்களை அங்கீகரிக்கச் செய்தார். ஊழலுக்கு எதிரான சட்டம், மத்திய வங்கிச் சட்டம், தேர்தல்கள் செலவு ஒழுங்குவிதிகள், மறுசீரமைப்பு பணியகம், அரச கடன் முகாமைத்துவச் சட்டம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க சட்டம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், அரச கடன்கள் சட்டம், மின்சக்தி சட்டம், பெண்களை வலுவூட்டும் சட்டம், அரச நிதி முகாமைத்துவச் சட்டம், பொருளாதார பரிமாற்றச் சட்டம் போன்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் அவற்றுள் பிரதானமானவை ஆகும்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான அபேட்சகர்கள் அனைவரும் ஒவ்வொரு அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை வகித்த நபர்கள் ஆகும். எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவிகளை வகித்தவர்கள் ஆவார்கள்.

அவர்களுள் அமைச்சர் ஒருவர் என்ற ரீதியில் நாட்டுக்கு பயனுள்ள வேலைத்திட்டங்களை அவர் மேற்கொண்டார். அவர் இளைஞர் விவகார அமைச்சராக இருந்த போது இளைஞர் விவகார அமைச்சின் பொற்காலம் ஆகும். அவர் கல்வி அமைச்சராக இருந்த போது தான் இந்த நாட்டு கல்வித்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அவர் கைத்தொழில் அமைச்சராக இருந்த காலம் தான் இந்த நாடு பூராக புதிய கைத்தொழிற்சாலைகள் உருவாக்கம் பெற்றன. அவர் பிரதமர் மற்றும் பொருளாதார கொள்கைகள் அமைச்சராக இருந்த காலத்தில் தான் நாட்டின் பொருளாதாரம் மிகவும் வளர்ச்சியடைந்த காலமாக இருந்தது. வேறு எந்த ஜனாதிபதி வேட்பாளருக்குத் தான் அது போன்ற ஒரு வெற்றிவாகை சூடிய வரலாறு உள்ளது?

அவர் பல தடவைகள் பிரதமராக பதவி வகித்தார் தான். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவருக்கு மேல் ஜனாதிபதி ஒருவர் இருந்தார். இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் முதன் முறையாக நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றார். சுதந்திரமாக நாட்டுக்காக பணியாற்றுவதற்கு முதன் முறையாக அவருக்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றது. மிகவும் துன்பம் நிறைந்த நிலைக்கு ஆளாகி இருந்த நாட்டை அவர் இரண்டு ஆண்டுகளுக்குள் ஒருவரும் நினைக்காத விதத்தில் கட்டியெழுப்பினார்.

அவர் மாத்திரம் தான், வெறும் வீண் பேச்சுக்கள் இன்றி வேலை செய்து காட்டியவர்.

அவர் வந்த இப்பயணத்தினைப் பற்றி பலர் பகிரங்கமாக அவரைத் திட்டுகிறார்கள். இரகசியமாக அவரது நலன்களைப் போற்றிப் புகழ்கின்றார்கள்.

ஜனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்வது பற்றி நீங்கள் இதுவரை ஒரு முடிவினை எடுக்காது இருப்பீர்களாயின் பின்வரும் கருத்துக்களை அறிவு சார்ந்த ரீதியில் வாசித்துப் பார்க்கவும். அதனை வாசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். ரணிலின் திறமையான செயலாற்றுகை பற்றிய இந்த விடயங்களை நாம் கூறவில்லை, சர்வதேச அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக விடயங்கள் பற்றிய பரந்துபட்ட அனுபவமுள்ள வெளிநாடுகளில் உள்ள மாபெரும் அறிஞர்கள் இவற்றைத் தெரிவிக்கின்றார்கள்.



"நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கான இலங்கை அரசின் அர்ப்பணிப்பு பற்றி நாம் திருப்தியடைகின்றோம்"

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி கிரிஸ்டலீனா ஜோர்ஜியெவா

(2023 செப்டம்பர்)



"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இலங்கை சார்பில் முன்னெடுக்கும் பொருளாதாரத்தை மிளிரச் செய்யும் திட்டத்திற்காக எனது பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றேன். நாட்டில் நிலவும் பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் நோக்கம் கொண்ட அவரது இந்த வேலைத்திட்டத்தைப் பாராட்டி அவரது அர்ப்பணிப்பை நான் மெச்சுகின்றேன்"

தென்கொரியா ஜனாதிபதி யூன் சுக் யோல்

(2023 செப்டம்பர் 19)



"இலங்கையின் மிகவும் சவால் மிகுந்த ஒரு காலகட்டத்தில் ஜனாதிபதி அவர்கள் அடைந்து கொண்டுள்ள வெற்றிகளுக்கு எனது பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் நாட்டில் ஸ்திரத் தன்மையினை ஏற்படுத்துவதற்கு அவரால் முடிந்துள்ளது"

அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் திரு ஸ்கொட் மொரிசன்

(2024 ஜூலை 18)



“பொருளாதார மற்றும் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பில் இலங்கை அடைந்து கொண்டுள்ள நிலையான முன்னேற்றம் தொடர்பில் நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்”

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் திரு மசட்சுகு அசகாவா

(2024 மே 5)



“கடன் நெருக்கடியை தீர்ப்பதற்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான உங்களது தலைமைத்துவத்தை நான் பாராட்டுகின்றேன்”

ஜப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திருமதி யோகோ கமிக்கவா (2024 மே 4)



“நான் கடமை புரியும் பிராந்தியத்தில் இலங்கையின் கதை போன்று மிகப்பெரிய மீண்டும் மறுமலர்ச்சியடைந்த கதை ஒன்று வேறு இல்லை”

தெற்கு மற்றும் மத்திய ஆசிய அலுவல்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் திரு டொனால்ட் லூ (2024 பெப்ரவரி 19)

இரண்டு ஆண்டுகளுக்குள் இவ்வாறான மாபெரும் அதிசயத்தை ரணில் செய்து காட்டினார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுள் அவ்வாறானவர்கள் இருக்கின்றார்களா?

இல்லவே இல்லை.

அவ்வாறாயின் உங்களது தெரிவாக இருக்க வேண்டியவர் அவர் தானே?

ஆம்!

ரணில்!

# தேரவாத வர்த்தக பொருளாதாரம்

தேரவாத வர்த்தக பொருளாதாரம் என்பது உங்களுக்கு பழக்கப்பட்ட ஒரு சொல்லாக இல்லாதிருக்க கூடும்.
நாம் செவியுற்றும் அறிந்தும் வைத்திருப்பது, உலகின் பல்வேறு நாடுகள் அன்று தொடக்கம் பின்பற்றிய பல்வேறு பொருளாதார முறைகள் பற்றி ஆகும். அவற்றுள் ஒருசில பொருளாதார முறைகள் தோல்வியடைந்த காரணத்தால் பயன்பாட்டில் இருந்து நீங்கியவை ஆகும்.
நாம் தேரவாத வர்த்தக பொருளாதார முறையின் கீழ் பல்வேறு துறைகளை மேம்படுத்தி வருமானம் உழைக்கின்றோம். அவை தொடர்பான தகவல்களை நாம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

வரலாற்றில் இலங்கையின் இராசரட்டை இராசதானி காலத்தில் இந்த நாட்டில் தேரவாத சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைமை ஒன்று காணப்பட்டது.

அப் பொருளாதார முறைமையின் கீழ் நாம் சீனா முதற்கொண்டு பாரசீக நாடுகளுடன் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டோம். இந்து சமுத்திரத்தின் பொருளாதார கேந்திர நிலையமாக பெயர்பெற்று விளங்கினோம். சமுத்திரப் பட்டுப்பாதையின் கேந்திர நிலையமாக பிரசித்திபெற்று விளங்கினோம்.

விசேடமாக ஒட்டுமொத்த கீழைத்தேயத்திற்கும் தானியம் விநியோகிக்கும் பொறிமுறை, வசதிகள் மற்றும் ஆற்றல் எம்மிடம் காணப்பட்டது. அதன் காரணமாக இலங்கை கீழைத்தேயத்தின் தானியக் களஞ்சியம் என பிரசித்தி பெற்று விளங்கியது.

13ஆம் நூற்றாண்டின் போதும் இராசரட்டை இராசதானி வீழ்ந்த போது தற்போதைய தாய்லாந்தின் அயோத்தியா இராசாதானி அந்த வர்த்தக கேந்திர நிலையத்தின் ஆதிக்கத்தை தனதாக்கிக் கொண்டது. இந்த இரண்டு இராசதானிகளும் 18 நூற்றாண்டுகளாக பிராந்தியத்தின் சந்தையில் ஆதிக்கம் செலுத்தியது.

அண்மைய வரலாற்றில் மீண்டும் இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியன பொருளாதார ரீதியான பலத்தை உருவாக்குவதற்கு பாடுபட்டன.

1980 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நவீன தாய்லாந்து ஏற்றுமதி மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி பரிமாற்றமடைந்தது. இலங்கை உள்நாட்டு உற்பத்திக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு இறக்குமதியினை மாற்றீடாக கொண்டு விளங்கியது.

| தனி நபர் மொத்த தேசிய உற்பத்தி | | |
|---|---|---|
| ஆண்டு | இலங்கை | தாய்லாந்து |
| 1960 | 144 அ.டொ | 104 அ.டொ |
| 2023 | 3,828 அ.டொ | 7,172 அ.டொ |



கடந்த ஆண்டுகளாக எமது பொருளாதார கொள்கைகளுக்கு முக்கிய அடித்தளமாக உள்நாட்டு உற்பத்தி காணப்படுகிறது. அன்றாட தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு உள்நாட்டு உற்பத்திகள் பற்றாக்குறையாக உள்ள காரணத்தால் பற்றாக்குறையானவற்றை இறக்குமதி செய்து வரவு செலவு இடைவெளியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களின் மூலம் ஈடு செய்யப்படுகிறது.

புத்தபெருமான் சாமஞ்ஞபல சூத்திரத்தில் சுட்டிக்காட்டியதன் பிரகாரம் நுகர்வுக்காக அன்றி முதலீட்டுக்காகவே கடன் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். நாம் அப் பொருளாதார சிந்தனையைப் புறக்கணித்தோம். சுமார் 2022 ஆம் ஆண்டளவில் சுமார் 84 பில்லியன் பெருமளவு தொகை அமெரிக்க டொலர் கடன் நம்மீது சுமத்தப்பட்டிருந்தது. அதில் பெருமளவு தொகையை நுகர்வுக்காகவே நாம் பெற்றோம். இதன் காரணமாக நாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உலகத்தார் முன்னிலையில் இழிநிலைக்குத் தள்ளப்பட்டோம். நாடு முற்றுமுழுதாக வீழ்ச்சியடைந்தது.

2022 ஆம் ஆண்டில் பொருளாதாரம் பாரதூரமாக சுருங்கும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையும் வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக ரூபாவின் பெறுமதி மதிப்பிழந்தது. 2019 ஆம் ஆண்டு 183.61 ரூபாவாக காணப்பட்ட அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 2022 ஆம் ஆண்டு 363.11 ரூபாவாக மாற்றமடைந்தது. 2019 ஆம் ஆண்டு 3.53% சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம் 2022 ஆம் ஆண்டு 70% சதவீதமாக உயர்வடைந்தது.

நாடு வளர்ச்சியடையும் வேகம் குறைவடைந்த போது நாடு சரிவடையும் வேகம் அதிகரித்தது. வாழ்க்கைச் செலவு மற்றும் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க வேண்டுமாயின் நாம் செய்ய வேண்டியது நாடு வீழ்ச்சியடையும் வேகத்துக்கு வேகத்தடை போட்டு நாடு வளர்ச்சியடையும் வேகத்தை அதிகரித்தல் ஆகும்.



## நாம் துவங்கி விட்டோம்....

மீளவும் மீண்டெழும் கடினமான முயற்சியை ஆரம்பித்து, நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம். அப்போது நாடு மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது. பேச்சுவார்த்தைகளை நடாத்தும் போது எமது பலவீனமான நிலைமை எமக்கு பாரிய பிரதிகூலமாக அமைந்தது. அனைத்து கஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டு நாட்டை மீண்டும் வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு நாம் பாடுபட்டோம். மீண்டும் ஒருமுறை மக்கள் வரிசைகளில் கஷ்டப்படும் ஒரு யுகம் உருவாகாமல் இருப்பது எமது எதிர்பார்ப்பாக காணப்பட்டது.

அந்த நோக்கத்தின் அடிப்படையில் நாம் பின்பற்றிய தேரவாத சந்தைப் பொருளாதார வழிமுறை வெற்றியளித்துள்ளது என்பதனை இன்று முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

## எளிதாகும் வாழ்க்கைச் சுமை

நாம் வாழ்க்கைச்சுமையை எளிதாக்குவது பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வேலைத் திட்டங்கள் மூலமே. அவ்வாறின்றி பிரசித்தி பெறுவதை எதிர்பார்த்து வெளிநாட்டுக் கடன் பெற்று உங்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலமாக அல்ல. அவ்வாறான நிவாரணங்கள் தற்காலிகமானதே.

எமது வேலைத்திட்டம் காரணமாக 2022 இல் 70% சதவீதமாக இருந்த பணவிக்கம் 2024 ஜூலை மாதம் 2.81% சதவீதம் வரை வீழ்ச்சியடைந்தது. நானூறு ரூபாவை அடைவதற்கு நெருங்கியிருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி 300 ரூபாவை விட குறைந்த மட்டத்திற்கு தற்போது வந்துள்ளது. 2022 ஆம் ஆண்டு 92 ஒக்டேன் பெட்ரோல் லீற்றர் ஒன்றின் விலை 470 ரூபாவாகும். தற்போது அதன் விலை 344 ரூபாவாகும். அன்று ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 460 ரூபாவாகும். இன்று அதன் விலை 317 ரூபாவாகும். மின் கட்டணங்கள் குறைந்து செல்கிறது. நீர் கட்டணங்களும் வீழ்ச்சிடைந்து செல்கிறது.

இதன் காரணமாக வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. எமது நாடு மீண்டும் வழமை நிலைக்கு வந்துள்ளது.

பொருளாதாரம் வலுவடைந்து செல்லச் செல்ல உங்களது வாழ்க்கைச் செலவை மேலும் எளிதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இன்னும் குறுகிய காலத்தில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் தொடர்பில் சலுகை வழங்குவதற்கும் எம்மால் முடியும்.



# வரிச் சுமைக்கு நிவாரணம்

2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அரச நிதி மறுசீரமைப்புக்கள் 2019 ஆம் ஆண்டு அப்போதைய அரசினால் இடைநிறுத்தப்பட்டன. நினைத்த விதத்தில் வரிகள் விலக்கப்பட்டன. அரச வருமானம் உலகின் ஆகக் குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்தது. எமது நாடு பொருளாதார தீக்குள் விழுவதற்கு அதுவும் ஒரு பிரதான காரணமாக அமைந்தது.

இத்தீயிலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்காகவே நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்தோம். 16 தடவைகள் அவர்களது இணக்கப்பாட்டை மீறிய வங்குரோத்து நிலையை அடைந்த ஒரு நாடு என்ற ரீதியிலேயே நாம் இம்முறை அவர்களிடம் சென்றோம். அந்த நேரத்தில் பேரம் பேசும் அதிகாரமோ பலமோ எம்மிடம் காணப்படவில்லை. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக அவர்கள் முன்மொழிந்த அரச வரமானம் தொடர்பான கொள்கைகளுக்கு இணங்குதல் அச்சந்தர்ப்பததில் நாட்டைக் காப்பாற்றுவதற்கு மேற்கொள்ள முடியுமாயிருந்த சிறந்த வழிமுறையாக காணப்பட்டது.

அதன் காரணமாகத் தான் வரி விதிக்க நேர்ந்தது. அது நாம் விரும்பி மேற்கொண்ட ஒரு விடயம் அல்ல. ஆயினும் அச்சந்தர்ப்பத்தில் வேறு மாற்றுவழிகள் காணப்படவில்லை. இந்த வரி காரணமாக விசேடமாக வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போன்ற தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட நபர்கள் அதிகம் பாதிக்கப்பட்டார்கள்.

ஆனாலும் எமது பொருளாதாரத்தை ஒழுக்க ரீதியில் வழிநடத்தி பலமான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு எம்மால் தற்போது முடிந்துள்ள காரணத்தால் வரி நிபந்தனைகள் தொடர்பில் மீண்டும் கருத்திற் கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை நாம் பெற்றுக் கொண்டோம்.

அதன் பிரகாரம் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வரி நிலைகளுக்கு இடையிலான இடைவெளியை விரிவாக்குவதற்கும் வரிவீதங்களை திருத்துவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. விரைவில் அந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

இந்த நிவாரணத்திற்கு மேலதிகமாக தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட நபர்களுக்கு வரி விடுதலை சேவை ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம்.

அதே போல் இடைக்கால வரிகள் காரணமாக பலர் கஷ்டங்களுக்கு ஆளாகி உள்ள காரணத்தால் நாம் படிப்படியாக இடைக்கால வரிகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம்.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் இப்பணிகளைப் பூர்த்தி செய்து வரி செலுத்தும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

## தாய்லாந்து மற்றும் வியட்நாமை நோக்குவோம்

ஒரு மஹாயான பௌத்த நாடாக உள்ள வியட்நாம் இங்கு எமக்கு சிறந்ததொரு உதாரணம் ஆகும். 1990 ஆம் ஆண்டளவில் எமது பொருளாதாரக் கொள்கையைத் தான் வியட்நாமும் பின்பற்றியது. ஆயினும் 1995 ஆம் ஆண்டு வியட்நாம் தாய்லாந்து முறையை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டது. அதன் பிரதிபலனை தற்போது காணக்கூடியதாக உள்ளது.

| மொத்த தேசிய உற்பத்தி | | |
|---|---|---|
| ஆண்டு | இலங்கை | வியட்நாம் |
| 1990 | 8 பி. அ.டொ | 6.5 பி. அ.டொ |
| 2023 | 84.4 பி. அ.டொ | 429 பி. அ.டொ |

தாய்லாந்து மற்றும் வியட்நாம் தொங்குபாலப் பயணத்தை வெற்றியடையச் செய்து கொண்டது.
எமது பயணத்தை வெற்றியடையச் செய்ய நாம் துவங்கியுள்ளோம்.
பின்வரும் இலக்குகளைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே எமது அப்பயணம் வெற்றியடையும்.

| குறிகாட்டி | தற்போதைய நிலைமை | இலக்கு | காலச் சட்டகம் |
|---|---|---|---|
| ஆரம்ப வரவுசெலவு மிகை | மொ.தே.உ 0.6% (2023) | மொ.தே.உ 2.3% | 2025 - 2032 |
| அரச கடன் | மொ.தே.உ. 111% (2023) | மொ.தே.உ 95% | 2032 |
| மொத்த நிதித் தேவைப்பாடு | மொ.தே.உ 27.8%(2023) | மொ.தே.உ 13% | 2027 —— 2032 ஏறத்தாழ |
| வெளிநாட்டுக் கடன் சேவை | மொ.தே.உ 9.2%(2022) | மொ.தே.உ 4.5% | 2027 —— 2032 வருடாந்த எல்லை |
| மொத்த அந்நிய செலாவணி ஒதுக்கு | 5.6 பி. அ.டொ. (2024 ஜூலை) | 15.1 பி. அ.டொ. | 2028 |
| பணவீக்கம் | 2.4% (2024 ஜூலை) | 5% | தொடர்ச்சியாக |
| திறைசேரிப் பிணை முறி | மொ.தே.உ 7% (2023) | மொ.தே.உ 7.5%லும் குறைவு | தொடர்ச்சியாக |

## அதே போல் இனிமேல்

- அரச கொடுப்பனவுகளின் நிலுவைத் தொகைகளை மூன்று மாதங்களுக்கு மேல் நிறுத்தி வைப்பதற்கு அனுமதி இல்லை.
- வரவு செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக மத்திய வங்கி மூலம் நாணயத்தாள்கள் அச்சிடுவது முழுமையாக தடை செய்யப்படும்.
- மின்சாரம் மற்றும் எரிபொருள் விலைகள் அதற்காக செலவழிக்கப்படும் தொகையினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படல் வேண்டும். மின்சார சபை மற்றும் பெட்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடையுமாயின் உடனடியாக மற்றும் நேரடியாக திறைசேரி மூலம் அதற்காக நிதி வழங்கப்படல் வேண்டும்.
- சமூக பாதுகாப்புக்காக செலவு செய்யப்படும் தொகையை குறித்த அளவினை விடக் குறைத்தல் கூடாது.

இந்த இலக்குகள் மற்றும் வரையறைகள் நிலையானது ஆகும். அவை பற்றி மீண்டும் கலந்துரையாடுவதற்கு அல்லது மாற்றுவதற்கு இயலாது.

மேற்குறிப்பிடப்பட்ட இலக்குகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டே எமது உத்தியோகபூர்வ கடன் கொடுநர்கள் மற்றும் சீனா நிவாரணங்களை எமக்கு வழங்கியது.

அந்த இலக்குகள் மற்றும் வரையறைகளைப் பூர்த்திசெய்ய இயலாது போனால் எமக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மட்டுமின்றி கடன்சலுகைகள் அனைத்தும் இல்லாது போகும். அவ்வாறு இடம்பெறுமாயின் எமக்கு தொங்குபாலத்தில் இருந்து மீண்டும் பள்ளத்தில் வீழ்வதற்கு நேரிடும்.

ஆகவே நாம் செய்ய வேண்டியது யாதெனில், இந்த இலக்குகள் மற்றும் வரையறைகளுக்கு அமைவாக எமது பொருளாதாரத்தை உறுதியாகப் பேணி உயர்வான பொருளாதார அபிவிருத்தியை அடைந்கொள்ளுதல் ஆகும்.

**தேர்தல் காலங்களில் பெரும்பாலான அரசியல் கட்சிகள் இந்த உண்மையை மறைத்து பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளை உங்களுக்கு வழங்குவார்கள். ஆனாலும் அவை நடைமுறை சாத்தியம் அற்றவை. அவை தங்க முட்டையிடும் கோழியின் வயிற்றை கிழித்த கதை போலத் தான். இதனால் தான் அந்த எந்தெவோரு கட்சிக்கு அல்லது அபேட்சகருக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பகிரங்க கலந்துரையாடலுக்கு வர முடியவில்லை.**



## சுகபோகம் நிறைந்த ஒரு நாட்டை நோக்கி.....

எமது திட்டம் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்தி மற்றும் சேவையை மையப்படுத்திய பொருளாதாரத்தை வலுப்படுத்துவது ஆகும்.

பொருளாதாரத்தைப் பலப்படுத்தாது போனால், நாட்டின் வேறு எந்தவொரு துறையையும் மேம்படுத்த முடியாது. பட்டினியால் வாடும் ஒரு நாட்டுக்கு ஆன்மீக விருத்தியை அடைந்து கொள்வதற்கான எந்தவொரு வாய்ப்பும் இல்லை. பட்டினியால் வாடும் நபர் ஒருவருக்கு போதனைகள் மூலம் எந்தவொரு பயனும் கிடைக்காது என புத்த பெருமான் சுட்டிக்காட்டி உள்ளார்.

இத்திட்டத்தின் ஊடாக முன்னோக்கிச் செல்லாது விடின் இன்னும் சில ஆண்டுகளில் நாம் பாரியதொரு பொருளாதார நெருக்கடிக்கு மீண்டும் ஆளாவோம். இதே பாதையில் முன்னொக்கிச் செல்வதன் மூலம் மாத்திரம் தான் அதனைத் தடுப்பதற்கு முடியும்.

சதாவும் உலகத்திடம் கடன் பெற எம்மால் முடியாது. கடன் பொருளாதாரம் ஒன்றின் மூலம் நாட்டை உயர்வான இடத்துக்கு கொண்டு செல்ல முடியாது. இப் பயணம் முன்னோக்கி நகருமாயின் நாம் 2048 இல் கடனற்ற, அபிவிருத்தியடைந்த ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

## ஏழ்மையற்ற ஒரு சந்ததியினர்

கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக எமது நாட்டு மக்களில் 25மூ சதவீதத்தினர் பல்வேறு ஏழ்மை நிலைக்கு ஆளாகி உள்ளார்கள். வசதி வாய்ப்புக்கள் இல்லை. சரிவர கல்வியினை பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் இல்லை. சுத்தமான நீர் இல்லை. மின்சாரம் இல்லை. தொழில்கள் இல்லை. வீடுகள் சொத்துக்கள் இல்லை. திருமணம் முடித்து குடும்பம் மற்றும் பிள்ளைகளைக் கட்டிக்காப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

நாம் இந்த நிலைமையை மாற்றுவதற்கு முன்னுரிமை வழங்குவோம். எதிர்வரும் 5 ஆண்டு காலத்திற்குள் இவ்வாறான துன்பங்கள் மூலம் கஷ்டப்படும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களை 10% சதவீதம் வரை குறைப்பதற்கு நாம் செயற்படுவோம். அதற்கான அடித்தளத்தை வழங்கி சமூகப் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையினை நாம் தயாரித்துள்ளோம்.

வறுமை நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக சமுர்த்தி திட்டத்தினை விடவும் பரந்துபட்ட மற்றும் பாரிய வேலைத்திட்டமான "அஸ்வசும" ஐ நாம் ஆரம்பித்தோம். இதன் கீழ் ஜீவனோபாயம் தேவைப்படும் 24 இலட்சம் குடும்பங்களுக்கு நன்மைகள் வழங்கப்படும். வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு உயர்ந்தபட்சம் 15000 ரூபா வரையான கொடுப்பனவு கிடைக்கப்பெறுவதுடன் அக்குடும்பங்களில் உள்ள சிறுநீரக நோயாளர்களுக்கு, அங்கவீனமுற்ற நபர்களுக்கு மற்றும் முதியோர்களுக்கு புறம்பான கொடுப்பனவுகள் வழங்கப்படும். இது சமுர்த்தி திட்டத்தை விடவும் கூடுதலான ஒரு தொகை ஆகும். இதனை மேலும் முறைமைப்படுத்து வதற்காக "அஸ்வெசும" மற்றும் சமுர்த்தி ஆகியன ஒன்றிணைக்கப்படும்.

வறுமை நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்றும் வேலைத்திட்டத்தை மிகவும் முறைசார்ந்த ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்வோம். அதற்காக "அஸ்வெசும" மற்றும் சமுர்த்தி வேலைத்திட்டம் ஆகியன ஒன்றிணைக்கப்படும்.

கடும் வறுமை நிலை மற்றும் சமூக ரீதியில் துன்பப்படும் பல சமூகக் குழுக்கள் இனம் காணப்பட்டள்ளது. பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் நிரந்தர பங்குதாரர்களாக இந்த வறுமையான குடும்பங்கள் ஈடுபடுத்தப்படும். பிரதேச உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அரச பணிகளில் ஊழியர்களை ஈடுபடுத்தும் போது இவ்வாறான சமூகக் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை வலுவடையச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அவ்வாறான சமூகக் குழுக்கள் உள்ள பிரதேசங்களை இனம் கண்டு வறுமையை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பொருந்தும் வகையில் அப்பிரதேசங்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

ஐந்தாண்டு செயற்பாடு
இயலும் ஸ்ரீ லங்கா

## அழகான 2048 இற்கு....

நாம் உருவாக்கும் தேரவாத வர்த்தக பொருளாதாரத்தின் மூலம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் போதுமான அளவு வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்வோம். இப் பயணப் பாதையின் ஊடாக உயர்வான போட்டித்தன்மை, ஏற்றுமதியை மையமாகக் கொண்ட டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு முடியும் என்பதுடன் 2048 இல் எமது அனைத்து பொருளாதார இலக்குகளையும் அடைந்து கொள்ள முடியும். இந்த அபிவிருத்தியடைந்த யுகத்தை நோக்கிப் பயணிப்பதற்குத் தேவையான பரிமாற்றத்திற்கு அடிப்படையாக அமையும் பிரதான சட்டங்களை நாம் தற்போது அங்கீகரித்து நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

மத்திய வங்கி சட்டம், அரச நிதி முகாமைத்துவ சட்டம், அரச கடன் முகாமைத்துவ சட்டம் மற்றும் பொருளாதார பரிமாற்ற சட்டம் அவற்றுள் முக்கியமானவை ஆகும்.

இதன் மூலம்,

I. புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதுடன் அதன் மூலம் தொழிற்சந்தை விரிவுபடுத்தப்படும். வருமானம் உழைக்கும் புதிய சந்தர்ப்பங்கள் உருவாக்கம் பெறும்.

II. வருமான உழைப்பு உயர்வடையும்.

பொருளாதாரத்தின் கூடுதலான சுமையினை தனியார் துறை மீது சுமத்துவதன் மூலமாகவே உலகின் பல நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன. நாம் உருவாக்கும் தேரவாத சந்தைப் பொருளாதாரத்தை அதனை விடவும் பரந்தளவில் தாபிப்பதற்கு நாம் திட்டமிடுவோம்.

பலம் பொருந்திய தனியார் துறையுடன் தோளோடு தோள் நின்று போட்டியிட முடியுமான இரண்டாம்ச துறைகள் எமது பொருளாதாரத்துடன் ஒன்று சேர்க்கப்படும்.



## I. அரச துறை

ஒட்டுமொத்த பொருளாதார முறைமையினையும் முழுமையாக ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அரசுக்கு உரியதாகும். அரசுக்குச் சொந்தமான வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் மூலம் இந்த நிதி ரீதியான வழிநடாத்தல் போட்டித் தன்மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

## II. மக்கள் துறை

மக்கள் துறை எனும் புதிய எண்ணக்கருவுக்காக அரசியலமைப்பின் 27(2)(ஊ) ஆம் உறுப்புரை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

"உற்பத்தியின், விநியோகத்தரின் மற்றும் பரிமாற்றம் செய்யும் மார்க்கங்கள் அரச, அரச நிறுவனங்கள் அல்லது வரப்பிரசாதம் கிடைக்கப்பெற்ற ஒரு சிலரின் கையில் அல்லது குவிக்கப்படாது மற்றும் மையப்படுத்தப்படாது இலங்கையின் அனைத்து மக்கள் மத்தியில் விரிந்து செல்லும் ஒரு தார்மீக சமூக முறையைத் தாபித்தல்"

மக்கள் துறை பொருளாதாரத்தின் பலம் மிக்க ஒரு பங்கினை வகிப்பதற்காக நாம்

- அனைத்து பிரசைகளுக்கும் காணி அல்லது வீடு ஒன்றின் உரிமையை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துவோம்.
- தேசிய சொத்து (National Wealth Fund) வளத்தினைத் தாபிப்போம்.
- கூட்டுறவுத் தொழில்முயற்சியை பூரண மறுசீரமைப்புக்கு உட்படுத்துவோம்.

## சொத்துக்களின் உரிமை

பிரசைகளுக்கு உரிமையை வழங்கும் வேலைத்திட்டத்தை முறைமைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்துவதற்காக புறம்பான அதிகார சபை ஒன்று உருவாக்கப்படும். இதன் ஊடாக "உருமய" நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு காணி உரித்துக்களை வழங்குதல் மற்றும் கொழும்பு நகரத்தின் அரசாங்கத்துக்குச் சொந்தமான குறைந்த வருமானம் பெறும் நபர்களின் வீட்டு உரிமையினை அவ்வீட்டின் உரிமையாளர்களிடமே ஒப்படைத்தலை 4 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்வோம்.

மத்திய தர வகுப்பினருக்கு வீடு கட்டுவதற்காக சலுகைக் கடன் வழங்கப்படும். வருமானம் குறைந்தவர்களுக்கு தொடர்மாடி வீடுகளை உரித்தாக்குவதற்கான வசதிகள் வழங்கப்படும்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்காக புதிய கிராமங்கள் உருவாக்கப்படுவதுடன் லயன் விடுகளில் குடியிருக்கும் நபர்களுக்கு காணி ஒன்றுக்கான உரித்து வழங்கப்படும்.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டின் கீழ் பல புதிய வீட்டுத்திட்ட முன்மொழிவுகள் அரச துறையின் தலையீட்டுன் நிர்மாணிக்கப்படுவதுடன் நாட்டின் அனைத்து நகரங்களும் உள்ளடங்கும் வகையில் பல மாடிகளைக் கொண்ட வீடுகளை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

இதன் காரணமாக தற்போது வீழ்ச்சியடைந்துள்ள நிர்மாணிப்புக் கைத்தொழிலை சுமார் இரண்டு வருட காலத்திற்குள் மீண்டும் பலப்படுத்துவதற்கு வழி பிறக்கும்.

## நிதி உரிமை

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை அங்கத்தவர்களுக்கு தற்போதுள்ளதை விடவும் பலமான தொழிற்சங்க பிரதிநிதித்துவம் வழங்கப்படும். வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் அதில் இணைக்கப்படுவார்கள். அதன் மூலம் மிகவும் சிறந்த நிதி நிர்வாகம் உறுதி செய்யப்படும்.

தற்போது அரச தேவைகளுக்காகவே இந்த நிதியம் ஈடுபடுத்தப்படுகிறது. அரசுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திறைசேரி பிணைமுறிகளுக்காக இந்த நிதியம் பெற்றுக் கொள்ளப்படுகிறது. நாம் அந்த நிலைமையை மாற்றியமைப்போம். பொருளாதாரம் பலமடையும் போது, அரச பணிகளுக்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படுவது ஆகக் குறைந்த மட்டத்திற்கு கொண்டுவரப்படும்.

அதன் மூலம் இந்த நிதியத்தை கூடுதலான வருமானம் பெற முடியுமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதுகாப்பான நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும். 2030 ஆம் ஆண்டளவில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியன எமது நாட்டின் மிகப்பெரிய முதலீட்டு நிதியமாக மாற்றமடையும். இதன் மூலம் நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு கூடுதலான பிரதிபலன்களை அடைந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும்.

- **தேசிய சொத்து வளம்** (National Wealth Fund)

வரவு செலவு மிகை மற்றும் அரச நிறுவனங்களின் இலாபங்களை ஒன்று சேர்த்து தேசிய சொத்து வளம் தாபிக்கப்படும். உள்நாட்டு மற்றும் சர்வதேச பங்குச் சந்தைகளில் இந்த நிதி முதலீடு செய்யப்படும்.

- **கூட்டுறவு**

சர்வதேச தரங்களின் பிரகாரம் மற்றும் போட்டித் தன்மை வாய்ந்த சவால்களுக்கு முகம் கொடுக்க கூடியவாறு கூட்டுறவுத் தொழில்முயற்சி முழுமையான மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படும். கூட்டுறவு முகாமைத்துவத்துக்கு அரசியல் மற்றும் அரச தலையீடுகள் மேற்கொள்ள முடியாதவாறு புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். ஸ்கெண்டினேவியா நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் கூட்டுறவு மாதிரியை ஒத்த புதிய கூட்டுறவு சட்டவிதிக் கோவை ஒன்றை அங்கீகரித்து கூட்டுறவு தொழில்முயற்சி தற்போதைய போட்டித் தன்மைக்கு முகம் கொடுக்க முடியுமான பலமான நிலைக்கு தரமுயர்த்தப்படும்.



# நடவடிக்கை – 2025 இற்கு அப்பால்...

இந்த நடவடிக்கை 100% சதவீதம் நடைமுறைச் சாத்தியமானது. நாட்டின் எதிர்கால அபிவிருத்தி வேகம் மற்றும் அரச வருமானம் தொடர்பில் விஞ்ஞான ரீதியான குறித்தொதுக்கப்பட்ட ஒரு கருத்தின் அடிப்படையில், அரசுக்கு நடுத்தரகால ரீதியாக செலவு செய்ய முடியுமான அசையக் கூடிய வளங்களின் அளவு யாது என்பதனை அடிப்படையாக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒன்று ஆகும். அதனால் தான் அனைத்து பணிகளும் கால எல்லைகள் குறிப்பிடப்பட்டு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஐந்தாண்டு செயற்பாடு
இயலும்
ஸ்ரீ லங்கா

# காலநிலையின் நன்மை தீமைகள்.

ஓர் அயன மண்டல நாடாக பல்வேறு காலநிலை மாற்றங்கள் எதிர்காலத்தில் எம் முன்னிலையில் காணப்படுகிறது. வெப்பநிலை உயர்வடைதல், மழைவீழ்ச்சி மாற்றமடைதல், கடல் மட்டம் உயர்வடைதல் அவற்றுள் சில ஆகும். அடிக்கடி இயற்கை அனர்த்தங்களுக்கு ஆளாகும் மாவட்டங்களில் அனர்த்தங்களில் இருந்து மீட்சிபெறக் கூடிய நகரங்கள் நிர்மாணிகப்படும்

நாம் இப் பிரச்சினையை முற்கூட்டியே உணர்ந்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அதன் ஊடாக ஒரு பசுமை தேசத்திற்காக பூகோள காலநிலை மாற்றங்களின் தீமைகளை எமது நாட்டுக்கு நன்மையானதாக ஆக்கிக் கொள்வதற்காக நாம் பாடுபட்டோம்.

காலநிலை மாற்றங்கள் தொடர்பான உலக நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னுரிமையை தற்போது அடைந்துள்ளோம். **காலநிலை நியாயப்படுத்தல் அமைப்பு, காலநிலை சமுர்த்தி திட்டம், காலநிலை மாற்ற பல்கலைக்கழகம்** போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம்.

பூகோள ரீதியான வடக்கு மற்றும் தெற்கு நாடுகள் உள்ளடங்களாக உலக காலநிலை மாற்றங்களுக்கு முகம் கொடுப்பதற்காக பிரான்ஸ் நாட்டின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட பூகோள நிதி ஒப்பந்தத்தில் நாம் பிரதான பங்குதாரர்களுள் ஒருவராக உள்ளோம். அதேபோல் தெற்கு பூகோள நாடுகளை அடிப்படையாகக் கொண்ட இந்தோனேசியாவினால் ஆரம்பிக்கப்பட்ட பூகோள கலப்பு நிதி முயற்சிக்காகவும் நாம் ஒன்றிணைந்துள்ளோம்.

அயன மண்டல சூழல் பாதுகாப்புக்காக நாம் தற்போது அயன மண்டல வலய முயற்சியை ஆரம்பித்துள்ளோம்.

இப்பணிகளுக்காக செயலூக்கத்துடன் பங்கேற்பதன் மூலம் எமது பொருளாதாரத்துக்கு வலு சேர்க்கும் சந்தர்ப்பம் உருவாகும். அதற்குரிய பின்னணியினை வழங்கி காலநிலை மாற்ற சட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவோம்.

**காலநிலை விவகாரங்கள் தொடர்பான செயலகத்தை** தாபித்து **காலநிலை மாற்ற நிதியம்** ஒன்று தாபிக்கப்படும். எமது சூழலைப் பாதுகாத்து காலநிலை மாற்றங்களுக்கு வலுவான முறையில் முகம் கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தை நாம் அதன் மூலம் ஏற்படுத்துவோம்.

உயிர் பல்வகைமை நிறைந்த இலங்கையின் உயிரியல் அடிப்படையினைப் பாதுகாப்பதற்கு மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு அதனை உரித்தாக்குவதற்கான புதிய உயிரியல் விஞ்ஞான சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் நிறுவனம் தாபிக்கப்படும்.

எமது ஐந்தாண்டு வேலைத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள விவசாயம், கைத்தொழில், வலுசக்தி போன்ற பல்வேறு துறைகளுக்காக காலநிலை மாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட சூழல் நட்புறவான வழிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்துவோம். அவை பற்றிய விடயங்கள் விரைவில் உங்களுக்கு தெளிவாகும்.

ஏற்கனவே இவ் அனைத்து வேலைத்திட்டங்களையும் நாம் ஆரம்பித்துள்ளோம்.

# நவீன விவசாய கலாச்சாரம்

தற்போதைய உலக சனத்தொகை சுமார் 8 பில்லியன் ஆகும். 2050 ஆம் ஆண்டளவில் அது சுமார் 29% சதவீதம் அதாவது 9.8 பில்லியன் வரை அதிகரிக்கும். இவ்வாறு அதிகரிக்கும் சனத்தொகைக்கான உணவு மற்றும் தானியங்கள் இன்றுள்ளதை விடவும் கூடுதலாக தேவைப்படும்.

அத்தகைய தேவைப்பாட்டில் மிகவும் சிறியதொரு சதவீதத்தையாவது வழங்குதல் எமது இலக்காக அமைதல் வேண்டும்.

அதற்காக அதிக போட்டித் தன்மையுள்ள ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கூடுதல் வருமானம் பெறும் நவீன விவசாய கலாச்சாரம் ஒன்றை நாம் அறிமுகப்படுத்துவோம். வெளிநாட்டு சந்தைக்கான சேதனப்பசளை பயிர்ச்செய்கைகளை நாம் ஊக்குவிப்போம்.

உரம், உதிரிப்பாகங்கள் மற்றும் நவீன இயந்திர சாதனங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். விவசாய உற்பத்திகளை நேரடியாக விவசாயிகளிடம் கொள்வனவு செய்யும் விநியோக வலையமைப்பு ஒன்று தாபிக்கப்படும். கிராமிய விவசாயக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக குளிரூட்டி வலையமைப்பு ஒன்று நாடு முழுவதும் தாபிக்கப்படும்.

வீட்டுத்தோட்டம், நகர்ப்புற தொடர்மாடி வீடுகளை அண்டிய பயிர்ச்செய்கை விரிவுபடுத்தப்படும்.

அரசுக்குச் சொந்தமான குறைப் பயன்பாடுடைய காணிகளுள் புதிதாக 3 இலட்சம் ஏக்கர் காணிகள் வர்த்தகப் பயிர்ச் செய்கைக்காக ஒதுக்கப்படும்.

உருமய காணி உறுதிகளை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு அவர்களது பயிர்ச்செய்கைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும். அத்தகைய காணிகளை பயனுள்ள பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய விவசாய தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு ஊக்குவிக்கப்படும்.

அறுவடைகளின் போக்குவரத்து, அறுவடைகள் வீண்விரயமாகாத விதமாக களஞ்சியப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நவீனமயப்படுத்தப்படும்.

உள்நாட்டு உணவு வகைகளை பிரசித்தப்படுத்துவதற்காக அரச தலையீட்டுடன் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

விவசாய நடவடிக்கைகள் மற்றும் அன்றாட நீர்த் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக **மல்வத்து ஓயா, தல்பிட்டிகல மற்றும் வயம்ப கால்வாய்க் கருத்திட்டம்** துரிதமாக பூர்த்தி செய்யப்படும்.

இக்கருத்திட்டங்களின் முதற்கட்டம் 2030 இல் பூர்த்தி செய்யப்படும்.

நெல் விவசாயத்திற்குத் தேவையான உரம் அல்லது ஏனைய தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக 25000 ரூபா நிவாரண உதவி நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு போகத்தின் போதும் உத்தரவாத விலை நிரணயிக்கப்படும்.



## கடல் அலைகளின் மத்தியிலே

நாட்டைச் சுற்றி கடல் வளம் காணப்பட்ட போதும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக எம்மிடமுள்ள படகுகளின் எண்ணிக்கையில் 40% சதவீதத்திற்கும் குறைந்த படகுகளே கடலுக்குச் செல்கின்றன. இதன் காரணமாக கடலிலில் இருந்து ஆகக்கூடிய பிரதிபலனைப் பெறக்கூடிய திட்டமொன்றை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் தலைமையில் நாம் நடைமுறைப்படுத்துவோம். அதன் மூலம் தற்போது மீன்பிடி வள ஏற்றுமதி மூலம் நாம் உழைத்துக் கொள்ளும் 300 மில்லியன் டொலர்கள் இரட்டிப்பாக்கப்படும்.

நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில், இறால் செய்கை, நீரியல் தாவரம், அலங்கார மீன் கைத்தொழில் ஆகியவற்றை ஊக்குவித்து அத்தகைய துறைகள் பிரசித்தப்படுத்தப்படும்.

நாடு முழுவதும் உள்ள மீன்பிடித் துறைமுகங்கள் நவீனமயப்படுத்தும். அவை மீன்பிடிப் பொருளாதார மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும். இச் செயன்முறைக்காக மீனவ சங்கங்கள், மீனவர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் விசேட நிபுணர்கள் தொடர்பு படுத்தப்படுவார்கள்.

சிறிய மீன்பிடிப் படகு மற்றும் பலநாள் மீன்பிடிப் படகுகளைக் கொள்வனவு செய்வதற்கான சலுகை முறை ஒன்று முன்னெடுக்கப்படும்.

மீன்பிடிக் கைத்தொழில் அபிவிருத்திக்காக நேரடி வெளிநாட்டு முதலீடுகள் ஊக்கப்படுத்தப்படும்.

சர்வதேச போக்குகளுக்கு உகந்த வகையில் மீன்பிடிக் கைத்தொழிலை நவீனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதிய படகுகள், உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை நவீனமயப்படுத்துவதற்கு மீனவ சமூகத்திற்கு உதவிகள் வழங்கப்படும்.

குறுகிய காலப்பகுதியினுள் மீனவ சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்கு இந்த வேலைத்திட்டத்தின் மூலம் ஆற்றல் கிடைக்கும்.

மீன்பிடித் துறைமுகங்களைச் சூழவுள்ள மீனவ நகரங்களை அபிவிருத்தி செய்து, வீடுகள் மற்றும் ஏனைய சமூக வசதிகளுடன் மீனவர்கள் வலுவூட்டப்படுவார்கள். தற்போது பயன்பாட்டில் உள்ள மீனவ வீடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர்களுக்கு சலுகை கிடைக்கும் வகையில் எரிபொருள் நிவாரணத்தை நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வழங்குதல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் அனைத்து பணிகளும் 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

கடலுக்கு அடியில் காணப்படும் பல்வேறு வளங்கள் தொடர்பாக இதுவரை நாம் உரிய கவனம் செலுத்தவில்லை. சர்வதேச விசேட நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவங்களைப் பயன்படுத்தி இந்த வளங்களிலிருந்து உயர்ந்தபட்ச பயனை அடைந்து கொள்ளும் நீண்டகால வேலைத்திட்டம் ஒன்றை நாம் நடைமுறைப்படுத்துவோம்.

இவ் அனைத்து திட்டங்களின் முதற் கட்டம் 2025 மற்றும் 2029 இற்கு இடையில் நடைமுறைப்படுத்தப்படும்.



# பால் தட்டுப்பாடு காரணமாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்

எமக்குத் தேவையான பாலின் அளவில் இன்னமும் எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுவது சுமார் 35 சதவீதம் ஆகும். பால் அறுவடை இல்லாத காரணத்தால் மில்கோ நிறுவனத்திலுள்ள பல நவீன இயந்திர ஆலைகள் வருடம் ஒன்றுக்கு மிகவும் குறுகியதொரு காலத்துக்கு மாத்திரம் செயற்படுத்தப்படுகிறது.

இதன் காரணமாக பால் இறக்குமதிக்காக வருடம் ஒன்றுக்கு 282 மில்லியன் டொலர்கள் வெளிநாடுகளுக்கு செல்கிறது.

அம்பேவெல தனியார் பண்ணையில் நாளொன்றுக்கு பசுமாடு ஒன்றின் மூலம் 35 லீற்றர் பால் பெற்றுக்கொள்ளும் அதேவேளை நமது நாட்டின் ஏனைய பால் பண்ணையாளர்கள் பசுமாடு ஒன்றின் மூலம் சராசரியாக சுமார் 5 லீற்றர் பாலையே பெற்றுக் கொள்கின்றார்கள்.

இந்த நிலைமையை மாற்றியமைத்து தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை இந்திய தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டாளர்களை தொடர்புபடுத்தி பால் அறுவடையை அதிகரிக்கும் வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த வேலைத்திட்டத்தின் மூலம்

- 380 மில்லியன் லீற்றர் தற்போதைய வருடாந்த பால் உற்பத்தி 2035 ஆம் ஆண்டளவில் 820 மில்லியன் லீற்றர் வரை அதிகரிக்கப்படும்.
- அப்போது நாட்டின் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாக தூய பசும்பால் கிண்ணம் ஒன்றை வழங்க முடியும்.
- பால் உற்பத்தியில் தன்னிறைவடையும் போது தற்போது பால் இறக்குமதிக்காக வருடம் ஒன்றுக்கு வெளிநாடுகளுக்குச் செல்லும் பணம் சேமிக்கப்படுவதுடன் மிகையாகவுள்ள பாலில் இருந்து மேற்கொள்ளப்படும் பால் சார்ந்த உற்பத்திகள் மூலம் நிதியினை ஈட்டிக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கப்பெறும்.
- 200,000 இற்கும் அதிகமான சிறிய பால் பண்ணையாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு தரத்தில் உயர்ந்த மரபணு விலங்குகள், விலங்குணவுகள், மருந்து வகைகள், தடுப்பூசிகள், செயற்கை இனப்பெருக்கத்திற்கான மாடுகளின் விந்துகளைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் வழங்கப்படும்.
- தரத்தில் உயர்ந்த மரபணு வகை 20000 பசுமாடுகள் 2025 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு பால் பண்ணையாளர்களுக்கு வழங்கப்படும்.
- இந்த வேலைத்திட்டத்தின் மூலம் 2035 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு பால் பண்ணையாளர்கள் பெற்றுக் கொள்ளும் வருமானம் 40 பில்லியன் ரூபாவைத் தாண்டும். அதன் மூலம் கிராமியப் பொருளாதாரம் வலுவடையும்.
- உள்நாட்டு பால் பண்ணையாளர்களுக்காக சலுகைக் கடன் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும்.
- உள்நாட்டு பால் பண்ணையாளர்கள் பசு ஒன்றிலிருந்து நாளொன்றுக்கு பெற்றுக் கொள்ளும் பால் அறுவடை 20 லீற்றர் வரை அதிகரிக்கப்படும்.

இந்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டம் 2025 மற்றும் 2035 தசாப்தத்திற்குள் நிறைவு செய்யப்படும்.



## பயணியுங்கள் நாட்டைச் சுற்றி

இலங்கை உலகின் முக்கியமான ஒரு சுற்றுலா முடிவிடம் ஆகும்.

சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உயர்வான நிலைக்கு கொண்டு வந்து தற்போதைய 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகை எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் 5 மில்லியன் வரை அதிகரிக்கப்படும். தற்போது சுற்றுலாப் பயணி ஒருவர் மூலம் மொத்தம் 150 அமெரிக்க டொலர் வருமானம் நாட்டுக்கு கிடைக்கப்பெறுகிறது. அது 2035 இல் 500 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கப்படும்.

கொழும்பு, காலி, கண்டி, நுவரெலியா மற்றும் திருகோணமலை ஆகியன சுற்றுலா கேந்திர நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்படும். கிழக்குக் கரையோரம் மற்றும் யாழ்ப்பாணத்தை முதற்தர சுற்றுலாக் கிராமமாக மாற்றுவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும். தெற்கு கரையோரத்துக்கான கேள்வியை மென்மேலும் அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சுற்றுலாக் கைத்தொழில் மலையகத்துக்கு விரிவுபடுத்தப்படும்.

அனுராதபுரம் கலாச்சார மரபுரிமை நகரமாக மாற்றப்பட்டு சீகிரியாவின் நிலைக்கு உலகத்தின் முன் பிரசித்தப்படுத்தப்படும்.

பல புதிய சுற்றுலா வலயங்களின் பணிகள் எதிர்வரும் ஐந்தாண்டுகளில் பூர்த்தி செய்யப்படும்.

- இரணவில 400 ஏக்கர்
- பெந்தோட்டை 1000 ஏக்கர்
- ஹப்புத்தலை ___ வெலிமடை 100 ஏக்கர்

ஹோட்டல் மற்றும் தங்குமிடங்களை மறுசீரமைத்தல், புதிய ஹோட்டல்களை நிர்மாணித்தல் உள்ளிட்ட சுற்றுலாத் துறையின் பல்வேறு பணிகளுக்காக அரச மற்றும் தனியார் பங்குதாரர்களின் முதலீடுகள் ஊக்குவிக்கப்படும்.

இப் பணிகள் 2025 இல் ஆரம்பிக்கப்பட்டு 2033 இல் நிறைவு செய்யப்படும்.



# எமது உற்பத்திகள் சர்வதேசம் வரை

பொருளாதாரத்தின் முன்னோக்கிய பாய்ச்சலைப் பாய்வதற்காக எமது கைத்தொழில் உற்பத்திகளைச் சர்வதேச சந்தையில் போட்டியிடக்கூடிய மட்டத்துக்கு மேம்படுத்துதல் வேண்டும். தற்போது நாம் தைத்த ஆடைகள், கைத்தொழில் வாகனங்களுக்கான டயர் போன்றவற்றின் மூலம் சர்வதேச ரீதியில் நன்மதிப்பை பெற்றுள்ளொம்.

இந்த நிலைமையை விரிவாக்குவதற்காக நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நவீன இயந்திர சாதனங்கள் இந்த நாட்டுக்கு கொண்டுவரப்படும்.

சர்வதேச முதலீடுகள், தொழில்நுட்பம் மற்றும் விஷேட நிபுணத்துவ அறிவினை நாம் உயர்ந்தபட்சம் பயன்படுத்துவோம். உற்பத்திப் பொருளாதாரத்தை வளர்ப்பதில் தற்போதுள்ள அனைத்து தடைகளும் நீக்கப்படும்.

முதலீட்டு ஊக்குவிப்புக்கான புதிய பொருளாதார ஆணைக்குழு, நாட்டின் உற்பத்திறனை மேம்படுத்தும் ஆணைக்குழு, சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சர்வதேச வர்த்தகம் தொடர்பான அலுவலகம் ஆகியன தாபிக்கப்படும்.

வலுசக்தி, போக்குவரத்து, துறைமுகம், கப்பல், விமானம், கைத்தொழில் போன்ற துறைகளை உள்ளடக்கிய பிரதான பொருளாதார மத்திய நிலையமாக திருகோணமலை மாற்றப்படும். இந்த நடவடிக்கைகளுக்காக இந்தியாவின் உதவி பெற்றுக் கொள்ளப்படும்.

I. பிங்கிரிய முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தை விரிவாக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

II. காங்கேசந்துரை, பரந்தன் மற்றும் மாங்குளத்தில் 1000 ஏக்கர்களில் புதிய முதலீட்டு வலயத்தை தாபிக்கும் பணிகள் 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

III. 2027 இல் தொம்பேயில் 120 ஏக்கர்களில் புதிய முதலீட்டு வலயம் நிர்மாணிக்கப்படும். சப்புகஸ்கந்த முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தை விரிவுபடுத்தி அதனுடன் மேலும் 400 ஏக்கர்கள் சேர்க்கப்படும்.

IV. 4000 ஏக்கர் காணியில் நிர்மாணிக்கப்படும் ஹம்பாந்தோட்டை முதற்கட்டம் 2026 இல் ஆரம்பிக்கப்படும்.

V. கண்டி நகரத்தை மையமாகக் கொண்ட சுமார் 1000 ஏக்கர் தொழில்நுட்ப வலயம் ஒன்று 2026 இல் தாபிக்கப்படும்.

பாரியளவு கருத்திட்டங்கள் மற்றும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கான தேசிய அபிவிருத்தி வங்கி 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

உற்பத்திக் கைத்தொழிலை ஊக்கப்படுத்துவதற்காக தற்போது பல நிறுவனங்கள் செயற்படுதல் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களை பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாக்குகிறது. அதன் காரணமாக என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா என்ற பெயரில் புதிய பலம் மிக்க நிறுவனம் ஒன்று 2025 இல் தாபிக்கப்படும்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக பாரிய பின்னடைவைச் சந்தித்தார்கள். அவர்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஏற்கனவே பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவர்களுக்கு வழங்கப்படும் 25 இலட்சம் ரூபாய் வரையான கடன் தொகையின் வட்டி வீதம் 5மூ சதவீதத்துக்கு கொண்டுவரப்படும்.

திறைசேரியில் இதற்காக ஒரு விசேட பிரிவு தாபிக்கப்பட்டு ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாகாண மட்டத்தில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிதி மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் என்பதுடன் வழிகாட்டல் மற்றும் உற்பத்திப் பொருள் விற்பனை தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படும்.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் உத்தேச பொருளாதார மத்திய நிலையங்கள் ஊடாக அவர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு வழிவகுக்கப்படும்.


சிறிய மற்றும் நடுத்தர அளவு அரிசி ஆலை உரிமையாளர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும்.

அனைத்து உற்பத்திக் கைத்தொழில்களும் சூழல் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்படும். கைத்தொழில்கள் மூலம் ஏற்படும் சூழல் மாசடைவதனைக் குறைப்பதற்காக சர்வதேச தரங்களுக்கு அமைவாக மாசடையாத வர்த்தக முறைமை அறிமுகப்படுத்தப்படும். சுற்றாடலுக்கு விடுவிக்கப்படும் சூழலைப் பாதிக்கும் வாயுக்கள் அதன் மூலம் கட்டுப்படுத்தப்படும்.

காபன் வரியினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.







## உலக சக்திக்கு வலுசக்தி

பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்திக்கான முதலீடுகள் ஊக்கப்படுத்தப்படும்.

2030 ஆம் ஆண்டளவில் மின்சார விநியோக வலையமைப்பின் 70மூ சதவீதம் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும்.

இலங்கையை பசுமை வலுசக்தி மத்திய நிலையமாக மாற்றி இந்தியா மற்றும் அயல் நாடுகளுக்கு வலுசக்தி ஏற்றுமதி செய்யப்படும்.

இயற்கை வாயு மின்சக்தி உற்பத்தி விரிவுபடுத்தப்படும்.

எதிர்வரும் சில ஆண்டுகளுக்குள் வலுசக்திக்காக மக்கள் மக்களுக்கு செலவு செய்ய நேரிடும் செலவினைக் குறைத்து மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியன எந்தவித பற்றாக்குறையோ அல்லது தடைகளோ இல்லாமல் வழங்குதல் உறுதி செய்யப்படும்.

திருகோணமலை வலுசக்தி கேந்திர நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும்.

# டிஜிட்டல் பாதை

டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்கை அறிவு மற்றும் தானியங்கி எதிர்கால உலகினை வடிவமைக்கும் புதியதொரு போக்காக அமையும். அது சுகாதாரம், கல்வி, நிதி, பொருளாதாரம் போன்ற சகல துறைகளினதும் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமையும்.

இலங்கையை டிஜிட்டல் பரிமாற்றத்திற்கு உட்படுத்துவதற்கான **தொழில்நுட்ப மேம்பாட்டுச் சட்டம்** எம்மால் 2025 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்படும். இதன் மூலம் **டிஜிட்டல் பரிமாற்ற முகவர் நிறுவனம்** மற்றும் **தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க சபை** தாபிக்கப்படும். அதற்கான பின்னணியினை வழங்கி ஏற்கனவே **இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தில்** நாம் திருத்தம் மேற்கொண்டுள்ளோம்.

செய்மதி தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட இணைய சேவைகளை அறிமுகம் செய்வதன் மூலம் டிஜிட்டல் புரட்சி விரைவுபடுத்தப்படும்.

எமது நாட்டையும் எதிர்கால சந்ததியினரையும் இந்த நவீன போக்குடன் ஒன்றிணைப்பதற்காக நாம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வோம். இளைஞர் யுவதிகளை டிஜிட்டல் அறிவு ரீதியாக பலப்படுத்துவோம்.

மேலும் மூன்று ஆண்டுகளுக்குள் ஒட்டுமொத்த அரச சேவையினையும் செயற்கை அறிவு மற்றும் தானியங்கி முறையின் கீழ் கொண்டு வருவதற்கான திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவோம். முழுமையான ஈ-அரச சேவை (ந-புழஎநசஅநவெ) உருவாக்கப்படும்.

தற்போது எமது நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் பங்கு 5 பில்லியன் டொடர்களாகும். எதிர்வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் அதனை 15 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிப்பதற்குத் தேவையான பலம் மிக்க அஸ்திவாரம் இடப்படும்.

செயற்கை அறிவின் மூலம் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுவதனைத் தடுக்கின்ற, அவ்வாறே குரல், உருவம் போன்றவற்றின் மூலம் தனிநபர் அடையாளம் மற்றும் புலமைச் சொத்து உரிமையை பாதுகாக்கும் சட்ட ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்படும். மெட்ரிட் புரோட்டொகோல் கணக்கு (ஆயனசனை ூசழவழஉழட) மூலம் வர்த்தக மதிப்பெண் பற்றிய புலமைசார் உரிமை பாதுகாக்கப்படும்.

டிஜிட்டல் பிரசைகள் அடையாள அட்டை வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் தேர்தலுக்காக இலத்திரனியல் வாக்களிக்கும் முறை அறிமுகப்படுத்தப்படும்.



# அறிவு ரீதியாக பலம் மிக்க ஒரு சமூகம்

எதிர்காலத்தில் நம் எதிரே உள்ள தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியான சவால்களை நாம் வெற்றிகொள்ள வேண்டுமாயின் அறிவு மற்றும் தொழில்சார் திறமை கொண்ட ஒரு சமூகம் உருவாக்கப்படல் வேண்டும்.

தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மற்றும் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை ஆகியவற்றை ஒன்றிணைத்து **வொகேஷனல் ஸ்கில்ஸ் ஸ்ரீலங்கா** (ஏளுளுடு) என்ற பெயரில் புதியதொரு நிறுவனம் 2025 இல் தாபிக்கப்படும். அனைத்து தொழிற்பயிற்சி கல்லூரிகள் மற்றும் நிலையங்கள் அதன் கீழ் கொண்டுவரப்படும்.

**பாடசாலைக் கல்விக்குப் பின்னரான கல்வி ஆணைக்குழுவொன்று** தாபிக்கப்படும்.

பாடசாலையிலிருந்து விலகிச் செல்லும் மாணவர்கள் தொழிற்கல்வி பெற்றுக்கொள்வதற்கு உதவி வழங்கப்படும். இதன் முன்னோடிக் கருத்திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு 50000 மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிக்குத் தேவையான நிதி அரசாங்கத்தால் வழங்கப்படும். இம்முன்னோடிக் கருத்திட்டத்தின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மிகவும் பரந்துபட்ட அளவில் நிதி வழங்குதல் இடம்பெறும்.

2026 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் 9 **மாகாண தொழிற்கல்வி சபைகள்** தாபிக்கப்படும். மாகாணங்களில் உள்ள சகல தொழிற்பயிற்சி நிலையங்களும் தொழிற் கல்லூரி மட்டத்திற்கு தரமுயர்த்தப்பட்டு மாகாண தொழிற்கல்வி சபையின் கீழ் கொண்டு வரப்படும்.

**தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பல்கலைக்கழக** கல்வி நிறுவனங்கள் அனைத்து மாகாணங்களிலும் தாபிக்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் அதன் கீழ் பீடங்கள் தாபிக்கப்படும். கல்வி ரீதியாக வளர்ச்சியடைந்த வெளிநாடுகளில் நடைமுறையில் உள்ளவாறு இரண்டு வருட கல்வியின் பின்னர் இப்பல்கலைக்கழக கல்வி நிறுவனங்கள் மூலம் ஏற்புடைய பட்டங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது பல்கலைக்கழக முறைமையில் தொழில்நுட்பம் எனும் தலைப்பு மீது மிகவும் குறைவான அளவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக Chennai IIT (சென்னை தகவல் தொழில்நுட்ப நிறுவனம்) இன் அனுசரணையுடன் கண்டி ___ கலஹா பிரதேசத்தில் புதியதொரு பல்கலைக்கழகம் தாபிக்கப்படும். ஹோமாகம் கோரளை, சியெனாகோரளை மற்றும் சத்கோரளை ஆகிய பிரதேசங்களில் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படும். 2025 மற்றும் 2028 காலப்பகுதியில் இப்பணிகள் ஆரம்பிக்கப்படும்.

2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை 2026 இல் மறுசீரமைத்து **விமலசுரேந்திர தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக** பெயரிடப்படும்.

2029 ஆம் ஆண்டளவில் இலங்கை பல்கலைக்கழக முறைமைக்கு மேலும் இரண்டு புதிய பல்கலைக்கழகங்கள் சேர்க்கப்படும்.

- காலநிலை மாற்றம் பற்றிய சர்வதேச பல்கலைக்கழகம்
- **விவசாய தொழில்நுட்பம் பற்றிய பல்கலைக்கழகம்**



# கல்வி அறிவினால் அகிலத்தை வெல்வோம்;

பல வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட நிலைமைகளைக் கவனத்திற் கொண்டே தற்போதைய பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் உருவாகியது. அவை இப்போது பின்னடைந்துவிட்டது. அதன் காரணமாக பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் கட்டமைப்பினை 2040 ஆம் ஆண்டின் தொழில்நுட்ப யுகத்துக்கு பொருந்தக்கூடிய வகையில் நவீனமயமாக்கப்படும். அரசு அதற்குத் தேவையான அனைத்து நிதி ஏற்பாடுகளையும் வழங்கும்.

ஆசிரியர்கள் அனைவருக்கும் புதிய அறிவுசார் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் 2025 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும்.

2025 ஆம் ஆண்டு மற்றும் 2027 ஆம் ஆண்டிற்குள் பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதித்துவத்துடன் பாடசாலை சபையொன்றை அமைப்பது நிறைவு செய்யப்படும்.

17 வயதாகும்போது பல்கலைக்கழகத்துக்கு செல்லக்கூடியவாறு மென் திறமைகள், வாழ்க்கைத் திறமைகள், பண்பாட்டு விழுமியங்களுடன் நவீன பாடசாலைக் கல்வியைப் போலவே பரீட்சை மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவது நெறிப்படுத்தப்படும்.

எதிர்வரும் பத்தாண்டு காலத்திற்குள் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் English for All; - அனைவருக்கும் ஆங்கிலம் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படும். நாடு முழுவதும் காணப்படும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் பொருட்டு குறுகிய கால நிகழ்ச்சித்திட்டமாக புதிதாக 2500 ஆசிரிய ஆசிரியைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். ஓய்வுபெற்றோர் 1000 பேர், கல்வியியற் கல்லூரிகளிலிருந்து 400 பேர் மற்றும் போட்டிப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பட்டதாரிகள் 1100 பேர் ஆவர். இப்பட்டதாரிகளுக்கு 3 மாத கால விசேட பயிற்சிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

பிள்ளைகளின் மனதை ஈர்க்கும் விடயத்துடன் தொடர்புடைய கல்வியை வழங்கக்கூடியவாறு பாடசாலை பாடநூல்கள் முறையை மாற்றியமைப்பதற்கும், பாடவிதானங்களைத் திருத்துவதற்கும் எம்மால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிள்ளைகளிடம் புதிய அறிவு மற்றும் திறமைகளை மேலோங்கச் செய்தல், ரசனையுணர்வுடன், ஆக்கவுணர்வுடன் மற்றும் சுயமுயற்சியால் எழக்கூடிய ஆளுமை விருத்திசெய்யப்படும்.

எதிர்கால தலைமுறையினர் உருவாக்கப்படுவது முன்பள்ளிகளிலாகும். எனவே முன்பள்ளி முறைகளை அபிவிருத்தி செய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் முன்பள்ளி ஆசிரிய ஆசிரியைகளுக்கு தரம் மிக்க பயிற்சிகளை அளிப்பதற்காக விசேட வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்படும்.



## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

இலங்கையில் இலவச சுகாதார சேவையே காணப்படுகிறது. ஆனாலும் உண்மையாகவே சுகாதார சேவை இலவசமானதா? சிலவேளைகளில் வசதியற்ற ஒருவருக்கு இருதய சத்திர சிகிச்சை போன்ற அத்தியாவசிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்குக் கூட பல வருடங்கள் காத்திருப்பு பட்டியலில் காலம் வரும் வரை காத்திருக்க வேண்டும்.

அதனால் எமது சுகாதார சேவைகளைப் புதிய கண்ணோட்டத்துடன் நோக்கி, மக்களை மையப்படுத்திய சேவைகளை வழங்கக்கூடிய பின்புலமொன்றை உருவாக்குதல் வேண்டும்.

வைத்தியர்கள், தாதியர்கள், உதவியாளர்கள் மற்றும் வைத்திய தொழிலுடன் தொடர்புடைய துணை சேவையாளர்கள், துணை பணியாட்தொகுதியினர் போன்ற வைத்திய பணியாட்தொகுதியினர் ஆகியோர் மிகவும் சிறப்பாக கடமைகளை ஆற்றுவதற்குரிய சூழலை உருவாக்கி மூளைசாளிகள் வெளியேற்றம் குறைக்கப்படும்.

வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார பணியாட்டொகுதியினருக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் விரிவுபடுத்தப்படும்.

வைத்தியர்களுக்கு நாட்டிற்குள்ளேயே பட்டப்பின் படிப்பைப் பெற்றுக்கொள்வதற்குரிய வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

எமது நாடு முழுவதும் திறமையான மற்றும் புகழ்பெற்ற வைத்தியர்கள் இருக்கின்றனர். அனுபவமிக்க உதவி பணியாட்டொகுதியினர் எமது சுகாதாரத் துறையில் நிறைந்துள்ளனர். அதனால் வெளிநாட்டவர்க்கும்கூட வைத்திய சிகிச்சையினைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய உயர்ந்த மட்டத்தில் அதனை உருவாக்குதல் வேண்டும். அப்போது ஒருவகையில் அந்நியச் செலாவணி கிடைக்கும். அந்தப் பணத்தினைப் பயன்படுத்தி மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் சுகாதார வசதிகளை அதிகரிப்பதற்குரிய பின்புலம் உருவாகும்.

அந்த நோக்கத்தினையும் முன்னெடுக்கும் வகையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையினை புதிய திட்டத்திற்கமைய, சர்வதேச வசதிகளைக் கொண்ட நவீன வைத்தியசாலையொன்றாக மீளவும் நிர்மாணிக்கப்படும். அது தென் ஆசியாவிலேயே பிரதான வைத்தியசாலையொன்றாக மாற்றப்படும்.

நாடு முழுவதிலுமுள்ள அரச வைத்தியசாலைகளின் தரம் உயர்த்தப்படும். இன விகிதாசாரத்துக்கு இணைவான வகையில் அரச மருத்துவமனைகள் நிர்மாணிக்கப்பட்டு, அடுத்த 15 வருட இறுதிக்குள் சுகாதார சேவைகள் உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுவரப்படும்.

வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தை நவீன தொழில்நுட்பம் நிறைந்ததொன்றாக மாற்றி, வலயத்தில் உயர்ந்த மற்றும் தரமுடைய ஆராய்ச்சி நிறுவனமொன்றாக மாற்றப்படும்.

மருந்து வகைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், சர்வதேச தரநிர்ணய நிறுவனங்கள் ஏற்றுக்கொண்ட ஔடத தர உறுதிப்படுத்தும் நிறுவனமொன்று நிறுவப்படும்.

செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் தன்னியக்கமுறைகளைப் பயன்படுத்தி இலகு சுகாதார சேவையூடாக வீண்விரயத்தைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சுதேச மற்றும் பாரம்பரிய வைத்திய முறை மேம்படுத்தப்படும். இச்சம்பிரதாய வைத்திய முறையினை பாதுகாப்பதற்கும், எதிர்கால சந்ததியினருக்கு அதனை ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் வைத்தியசாலைகள் அனைத்தையும் முறையான ஒழுங்குமுறைக்குட்படுத்துவதற்குத் தேவையான சட்டதிட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

ஒன்பது மாகாணங்கள் முழுவதும் தனியார் வைத்தியசாலைகளை ஆரம்பிப்பதற்கு ஊக்கமளிக்கப்படும்.

நாட்டின் எந்தவொரு பிரஜைக்கும் தாம் விரும்பும் வைத்தியசாலையில் சிகிச்சையினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உறுதியான சுகாதார காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துதல் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

# குறுகிய வட்டத்திலிருந்து வெளி உலகத்திற்கு

எமது நாடு ஆகாய மற்றும் கடல் மார்க்க போக்குவரத்தில் மாத்திரமல்ல, தரை வழியாகவும் உலகத்துடன் அதிகமதிகமாக இணைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2026 ஆம் ஆண்டாகும் போது பலாலி சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்குவதற்குரிய பணிகள் ஆரம்பிக்கப்படும்.

ஹிங்குரக்கொட சர்வதேச விமான நிலையத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

கொழும்புத் துறைமுகம் மென்மேலும் விரிவாக்கப்பட்டு சர்வதேசத்தில் முன்னேற்றமடைந்த துறைமுகங்களுடன் சரி சமமாக போட்டி போடும் மட்டத்திற்கு கொண்டு வரப்படும்.

திருகோணமலைத் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள் 2026 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும்.

நாடு முழுவதுமுள்ள முழுத் துறைமுகக் கட்டமைப்பும் படிப்படியாக நவீனமயப்படுத்தப்படும்.





## அழகிய நகரம்

களுத்துறை தொடக்கம் நீர்கொழும்பு வரையிலான பகுதி தனியான பாரிய நகரமாக அபிவிருத்தி செய்யப்படும். அதற்கான திட்டம் சிங்கப்பூரின் சுபானா ஜுரொங் (Surbana Jurong) நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கப்படவுள்ளது.

தற்போது ஒவ்வொரு மாவட்டத்தினதும் தலைநகரங்களுக்கு மேலதிகமாக துணை நகரமொன்றை பிரதான வசதிகளுடன் நிர்மாணிக்கவுள்ளோம்.

இந்த அனைத்து நகரங்களும் நகர மற்றும் மாநகர நிர்மாணிப்பின் போது சர்வதேச மட்டத்திலான அனைத்து வசதிகளுடன் நிர்மாணிக்கப்படும்.

இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிப்புக்குள்ளாகும் நகரங்களுக்காகவும், அவ்வாறு ஆபத்துக்குள்ளாகுவதற்கான வாய்ப்புள்ள, புதிதாக நிர்மரிக்கப்படும் நகரங்களுக்காகவும் நவீன அபாய கட்டுப்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படும். பாதிப்புக்களைக் குறைக்கும் வகையிலேயே அவ்வாறான நகரங்கள் நிர்மாணிக்கப்படும்.

அவ்வாறான பல குறைபாடுகளை நாம் இனம் கண்டுள்ளோம். அத்தகைய குறைபாடுகளை பூர்த்திசெய்யும் நடவடிக்கைகள் 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

பிரதான நகரங்கள் பலவற்றில் பயன்படுத்தப்படுவது காலம் கடந்து சென்ற மலக்கழிவகற்றல் முறைமை ஆகும். நகர மலக் கழிவகற்றல் முறைமையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நகரங்களுக்காக வழங்கப்படும் நீர்வழங்கலானது முறைமைப்படுத்தப்படும் என்பதுடன் உலர்வலயம், மலையகம், கரையோரம் போன்ற நீர்ப்பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களுக்கு குழாய்நீர் வழங்கப்படும்.



## போக்குவரத்து

நிலைபேறான பசுமை போக்குவரத்து வேவை எனும் இலக்குடன் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் துறையின் எதிர்காலம் பற்றிய திட்டம் தயாரிகப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தொழில்நுட்பமானது வாகனங்களை வழிநடாத்துதல் தொடக்கம் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் வரை விரிவுபடுத்தப்படும்.

மின்சார வாகனப் பயன்பாட்டை ஊக்குவித்து மின்னேற்றம் செய்யும் நிலையங்கள் நாடு முழுவதும் தாபிக்கப்படும்.

பொதுப் போக்குவரத்து சேவைகள் படிப்படியாக அபிவிருத்தி செய்யப்படும்.

தற்போதுள்ள வீதி அபிவிருத்தி செய்தலை தொடர்ச்சியாக மேற்கொண்டு எதிர்காலத்திற்குப் பொருந்தும் வகையில் முழுமையான பெருந்தெருக்கள் திட்டமென்று தயாரிக்கப்படும்.

கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

இப்பணிகள் 2025 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும்.

## வடக்கிற்கொரு திறவுகோல்

ஆரம்ப காலந்தொட்டு இலங்கைப் பொருளாதாரத்திற்கு வலு சேர்க்கும் திறவுகோலாக அமைந்தது வடக்கு பிரதேசம் ஆகும். எனினும் யுத்தத்தின் பாதகமான விளைவின் பிரதிபலனாக வடக்கின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. நாம் இப்போது அந்த சக்திமிக்க பொருளாதாரத்தை வடக்கில் மீள மலரச் செய்வதற்குரிய பலத்தை வடக்கிற்கு வழங்குவதற்குரிய திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். மேல் மாகாணத்தைப் போலவே எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு உயர்ந்த பங்களிப்பை வழங்கும் திறவுகோலாக வடக்கினை மாற்றுவதே எமது நோக்கமாகும்.

நீண்ட காலமாக வடக்கு எதிர்நோக்கி வரும் முக்கிய பிரச்சினை நீர் பற்றாக்குறையாகும். தற்போது கடல் நீரைச் சுத்திகரிக்கும் கருத்திட்டமொன்றை நாம் ஆரம்பித்துள்ளதுடன், மேலும் அவ்வாறான கருத்திட்டங்கள் சில எமது வேலைப் பட்டியலில் காணப்படுகின்றன.

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நீர் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்திருப்பது "வடக்கிற்கொரு கங்கை" கருத்திட்டமாகும். 2027 ஆம் ஆண்டளவில் இது ஆரம்பிக்கப்படும். 2026 ஆம் ஆண்டில் வடக்கு முழுவதும் காணப்படும் சிறு குளங்கள் மறுசீரமைக்கப்படும். புளியங்குளத்திலிருந்து ஆரம்பித்து, மன்னாரில் கடலுடன் கலக்கும் பாலியாற்றை மறித்து நீர்த்தேக்கமொன்று நிர்மாணிக்கப்படும்.

மீள்புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி பொருளாதார கேந்திர நிலையமாக பூநகரி புதியதொரு நகரமாக மாற்றப்படும்.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்வி மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும்.

இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட '**சரஸ்வதி மஹால்**' தமிழ் கலை மற்றும் கலாசார மத்திய நிலையமாக மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பும் பெற்றுக்கொடுக்கப்படும்.

சர்வதேச புகழ்பெற்ற காலி **சாஹித்திய விழாவைப்** போலவே தமிழ் "சாகித்திய விழாவொன்று" யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும்.

விமானம், கப்பல் மற்றும் தரைப் போக்குவரத்துப் பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு தென்னிந்தியா மற்றும் வடக்குக்கிற்கு இடையில் பொருளாதார, சமூக, கலாசார உறவுகள் வலுவாக்கப்படும்.

## கிழக்கின் உதயம்

வலுச்சக்தி, போக்குவரத்து, துறை முகம், கப்பல், விமானம், கைத்தொழில் போன்ற துறைகளால் நிறைந்த பிரதான பொருளாதார மத்திய நிலையமாக திருகோணமலை மாற்றப்படும். இப் பணிகளுக்காக இந்திய உதவி பெற்றுக் கொள்ளப்படும்.

வெருகல் ஆறு தொடக்கம் பாணமை — குமண கடற்கரை சுற்றுலாக் கைத் தொழிலுக்கு ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்யப்படும்.

**ஹெடஓயா** நீர்க்கருத்திட்டம் 2025 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும்



# பெருந்தோட்டத்தின் சூரியோதயம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை நாம் தற்போது வெளியிட்டிருக்கின்றோம். அதற்கு மேலதிகமாக பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பல விசேட வழிமுறைகள் எம்மால் எடுக்கப்படும்.

லயின் அறை வாழ்க்கைக்குப் பதிலாக மிகவும் சிறந்த வாழ்க்கையொன்றை பெருந்தோட்ட மக்களுக்கு வழங்குவதற்காக வீட்டு உரிமை மற்றும் காணி உறுதிகள் அவர்களுக்கும் உரிமையாக்கப்படும். அதற்கமைய லயன்களுக்குப் பதிலாக கிராமமொன்றை அவர்களுக்கு வழங்குவதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படும். 2025 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

பெருந்தோட்ட மக்களுக்கு வேறு பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான காணிகள் போன்ற வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் ஏற்புடைய முறைமைகள் ஆரம்பிக்கப்படும்.

பெருந்தோட்டப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை இல்லாதொழிப்பதற்காகப் பெருந்தோட்டத்திலேயே உருவாகின்ற திறமையான இளைஞர் யுவதிகளை அதில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் ஸ்ரீபாத கல்வியிற் கல்லூரி பீடத்தை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெருந்தோட்டப் பாடசாலைகளின் பாடவிதானங்கள் இலகுபடுத்தப்படும். விசேடமாக விஞ்ஞான பாடநெறிகளுக்குத் தேவையான வசதிகள் படிப்படியாகப் பெற்றுக்கொடுக்கப்படும்.

பெருந்தோட்டத் துறையின் சுகாதாரம் மற்றும் துப்பரவேற்பாடு போன்ற வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகள் எடுக்கப்படும்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு அஸ்வெசும நலன்புரி வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.



# ஒளிரும் சமூகத்தை நோக்கி

சமூக மட்டங்கள் மற்றும் பல்வேறு சமூகக் குழுக்களைப் படிப்படியாக உயர்வான நிலைக்கு கொண்டு வருதல் முன்னேற்றத்திற்கான அடிப்படை ஆகும். அவதானத்திற்கு உட்பட்ட குழுக்கள் போன்றே அவ்வளவாக அவதானத்திற்கு உட்படாத குழுக்களும் எம்மத்தியில் உள்ளார்கள். பொருளாதார அபிவிருத்திக்கு இவ் அனைவரதும் பங்களிப்பு தேவையாக உள்ளது. அவ்வாறே அபிவிருத்தியின் நன்மைகள் இவ் அனைத்து குழுக்களுக்கும் நியாயமான விதத்தில் பகிரப்படுதலும் அவசியமாகும். அப்போது தான் சமூகம் ஒளிர்விடும்.

## திருடர்களைப் பிடிக்கும் சட்டங்கள்

திருடர்களைப் பிடிப்போம், பிடிப்போம் என்று கூறிக்கொண்டு திரியும் அரசியல் தலைவர்கள் எவரும் அதற்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சியோ அல்லது ஆர்வமோ காட்டவில்லை.

நாம் வீண்கதை பேசித்திரியவில்லை. நாம் செய்தது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி இலஞ்சம் மற்றும் ஊழல்களை இல்லாதொழிப்பதற்காக உலகின் சிறந்த வழிமுறைகளைக் கொண்டமைந்த நவீன ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றியமையாகும்.

தெற்காசியாவின் ஊழல்கள் குறைந்த நாடாக எமது நாட்டை மாற்றியமைக்க இருக்கின்றோம். இதற்காக நாங்கள் பின்வரும் ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

1. ஊழல்களை ஒழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படல்.
2. வெளிப்படைத் தன்மையான எதிர்காலத்துக்கு நிறுவனங்களைப் பலப்படுத்துதல்.
3. களவாடப்பட்ட சொத்துக்களை மீளப்பெறுதல்.
4. சர்வதேச பங்காளிகளுடன் ஒத்துழைப்பு வழங்கி செயல்படல்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ்

- 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க **ஊழல் எதிர்ப்புச் சட்டம்** முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.
- 2025 ஆம் ஆண்டு தொடக்கம் 2029 ஆம் ஆண்டு வரை தேசிய **ஊழல் எதிர்ப்புத் திட்டம்** தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
- கணக்காய்வுப் பணிகளை சக்தி வாய்ந்தவையாக மாற்றுவதற்குத் **தேசிய கணக்காய்வுச் சட்டம்** திருத்தப்படும்.
- சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் கடற்பாடுகள் பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தல் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படும்.
- நிதி மோசடி மற்றும் பணம் துாயதாக்கல் தொடர்பான சட்டதிட்டங்களை கடுமையாக்குதல்.
- ஊழல் நடவடிக்கைகளை இல்லாதொழிக்கும் சட்டதிட்டங்கள் மற்றும் விசாரணைகள் வலுவாக்கப்படும்.
- கம்பனிச் சட்டத்தைத் திருத்தி உரித்துடமை நன்மைகளுக்கான வரையறைகள், நிதி நடவடிக்கைகளுக்குரிய உலகளாவிய செயலணித் தரத்துக்கமைய தயாரிக்கப்படும்.
- அரச பெறுகை நடைமுறைச் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படும்.
- வரிச் சலுகையினைப் பெறும் நிறுவனங்களின் பட்டியலைப் பகிரங்கப்படுத்துதல்.
- தகவலுக்கான உரிமைச் சட்டம் மேலும் வலுவாக்கப்படும்.

## கௌரவமான மகளிர்

சிறுபான்மையின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொள்வோம். ஆயினும் எமது சமூகத்தில் பெரும்பான்மையான அதாவது 57% சதவீதமாகவுள்ள பெண்களின் உரிமைகளுக்காக நாம் உரியவாறு நடவடிக்கை எடுத்துள்ளோமா? அந்த வினா எம்முன் உள்ளது.

பெண்களுக்கு கௌரவம், பலம் மற்றும் சுயமரியாதை கிடைக்கக்கூடிய அமைப்பொன்றை சமுதாயம் முழுவதும் நாம் உருவாக்குவோ

வறுமையில் வாடும் பெண்களுக்கு உதவுவதற்காக புதிய கொள்கையொன்று தயாரிக்கப்படும்.

நிகழ்காலத்தில் பெண்கள் எதிர்நோக்கும் நுண் கடன்கள் உட்பட ஏனைய கடன் சுமை களிலிருந்து அவர்களை மீட்பதற்காக தற்போது நடைமுறையிலிருக்கும் வேலைத்திட்டத்தை மென்மேலும் விஸ்தரிக்கவுள்ளோம்.

பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு ஆகக்கூடியது 10 இலட்சம் ரூபா வரை 3 சதவீத வட்டியில் சலுகைக் கடன்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

வீட்டில், செல்லும்வழிகளில், தொழில்புரியுமிடம் போன்ற இடங்களில் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கச் செய்து முறையான மற்றும் முழுமையான பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அலகொன்றை பேணிச்செல்வது உறுதிப்படுத்தப்படும்.

இலங்கையின் சனத்தொகையில் 50.7% வீதம் பெண்களாகும். அரசியல் துறையில், வர்த்தகத் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

சார்க் வலயத்தின் ஏனைய நாடுகளுடன் ஒன்றிணைந்து பெண்கள் உரிமைகளுக்காக பிராந்திய சட்டங்களை உருவாக்குவதற்கும், அது தொடர்பாக பிராந்திய மாநாடொன்றினை இலங்கையில் நடாத்துவதற்கும் நாம் நடவடிக்கைகள் எடுப்போம்.

2025 முதல் 2030 வரையான காலத்திற்குள் அப்பணிகள் மேற்கொள்ளப்படும்.



## தேசத்திற்காக பூக்கும் மலர்கள்

பிள்ளைகளின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்களைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதிலிருந்தும், துர்நடத்தையாளர்களிடமிருந்தும் மற்றும் பாலியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதிலிருந்தும் விடுவிப்பது போன்றவை தொடர்பாக தேவையான சட்டவிதிமுறைகள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் உருவாக்கப்படும்.

யுனெஸ்கோ அமைப்புடன் ஒன்றிணைந்து, பிள்ளைகளின் தனித்துவத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலான புகைப்படங்கள் போன்றவற்றை இனையதளத்தில் இடுவதற்கு எதிரான சட்டவிதிகள் ஏற்கனவே வகுக்கப்பட்டு வருகின்றது. துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களுக்காக மிகவும் பொருத்தமான பாதுகாப்பு முறையொன்றை உருவாக்குவதற்கு நாம் நடவடிக்கைகள் எடுப்போம்.

சிறுவர் இல்லங்கள், முன்பள்ளிகள், மேலதிக வகுப்புகள், விளையாட்டுப் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலமாக பிள்ளைகளின் பாதுகாப்பு, வாய்ப்புகள் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்குரிய சட்டவிதிமுறைகளை நாம் கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வேலைப்பளு அதிகம் கொண்ட சமூக சூழலொன்றில் தனிமைப்படுத்தப்படும் மற்றும் அனாதரவான பிள்ளைகளுக்கு இலகுவாக கிடைக்கக்கூடிய ஆலோசனைச் சேவை மத்திய நிலையங்களை உருவாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். பாடசாலை மட்டத்தினைப் போலவே பாடசாலைக்குப் புறம்பாகவும் அரச அனுசரனை மற்றும் ஒழுங்குபடுத்தலுடன் இதனை மேற்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

அப்பணிகள் 2029 இல் பூர்த்தி செய்யப்படும்.



## இளைஞர்கள் வசந்தம்.....

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்பது இன்றைய இளம் தலைமுறையினரே. Gen Z வகைக்கு. அவர்கள் பிறந்த நாள் தொடக்கம் வளர்ந்ததெல்லாம் வேகமாக முன்னேறிவரும் தொழில்நுட்ப யுகத்திலாகும். டிஜிட்டல் சூழலிலாகும். அதன் காரணமாகவே வாழ்க்கையும் வேகமாகவுள்ளது. விரைவானது.

டிஜிட்டல் அறிவுடைய, வேகமான இளம் தலைமுறையினர் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவையான அறிவு மற்றும் தேர்ச்சிகளை நாம் பெற்றுக்கொடுப்போம்.

டிஜிட்டல் சந்தைப்படுத்தல் (Digital Marketing), வாடிக்கையாளர்களுக்கு சுதந்திரமான சேவைகளை வழங்குதல் (Freelancing), இலத்திரனியல் வர்த்தக செயற்பாடுகள் (E-commerce) போன்ற துறைகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவர்களுக்கு வீட்டிலிருந்தவாறே வருமானத்தினை ஈட்டிக்கொள்ளக்கூடிய பாதைகள் திறந்துவிடப்படும்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி வருமானத்தினை ஈட்டிக்கொள்ளும் இளம் தலைமுறையினருக்கு அதற்குத் தேவையான படைப்பாற்றல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

பொருளாதாரம் உறுதிப்படும்போது எழுச்சியுறும் நவீன விவசாயக் கலாச்சாரம், சூழல் நேயத்துடன் இணைந்த வர்த்தகம், போன்ற துறைகளில் தொழில்களைப் பெற்றுக்கொள்வதற்கும், புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் தேவைப்படும் பின்புலங்கள் உருவாக்கப்படும்.

தேசிய இளைஞர் மனநல சுகாதார விருத்திச் சேவைகள் விரிவுபடுத்தப்படும். பல்வேறு தீய அடிமைத்தனங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதற்குப் பயனுள்ளவாறு சமுதாயமயப்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

கலாச்சார, அழகியல் மற்றும் படைப்பாற்றல்மிக்க செயற்பாடுகளைப் போலவே விளையாட்டுத் துறையிலும் அவர்களுக்கு வாய்ப்புகள் மற்றும் உதவிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

அரசியல் துறையிலும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்குத் தேவையான பின்புலம் செய்துகொடுக்கப்படும். இளைஞர் பாராளுமன்ற ஆலோசனை அலுவலகம், அரசியல் கல்விக் கல்லூரி ஆகியவற்றை அமைப்பதன் மூலமாக புதிய தலைமுறை அரசியல்வாதிகள் அறிவு நிறைந்தவர்களாக மாற்றப்படுவார்கள்.

புதிய தலைமுறையினருக்குரிய உரையாடலை (Gen Z Dialogue) உருவாக்கி புதிய கருத்துகள் அரச நிர்வாகத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படும்.

மாகாண இளைஞர் மத்திய நிலையங்கள் மீண்டும் முழுமையாக உயிர்ப்பிக்கப்படும். நவீன வசதிகள் வழங்கப்படும்.



## விளையாட்டுக்கு பலம் சேர்த்தல்..

அன்று தொடக்கம் பின்பற்றப்பட்ட முறைசாராத வழிமுறைகள் காரணமாகவும் பலதரப்பட்ட வெளிவாரி தலையீடுகள் காரணமாகவும் தற்போதைய விளையாட்டு நிர்வாகத்தில் குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் காணப்படுகின்றன.

இவற்றுள் ஏதோ ஒரு காரணத்தால் பாதிக்கப்படுவது எமது விளையாட்டு வீரர்கள் ஆவார்கள்.

இதனை நிவர்த்தி செய்வதற்காக நாம் புதிய விளையாட்டுச் சட்டம் ஒன்றை அறிமுகம் செய்வோம்.

கிரிக்கட் விளையாட்டு தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பிரகாரம் **இலங்கை கிரிக்கட் நிறுவனத்தை மறுசீரமைப்பிற்கு உட்படுத்துவோம்**. குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு தற்போது அனுமதிக்காக சர்வதேச கிரிக்கட் கவுன்சிலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் பயிற்சி நிறுவனம் நிகழ்காலத்திற்கு ஏற்றவாறு தரமுயர்த்தப்படும்.

கிராமப்புற விளையாட்டு வீரர் வீராங்கனைகளின் திறமைகளை சர்வதேச தரத்திற்கு கொண்டுவருவதற்காக கிராமிய மட்டத்தில் மற்றும் பாடசாலை மட்டத்தில் முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

**தியகம மஹிந்த ராஜபக்ஜ விளையாட்டரங்கு சர்வதேச விளையாட்டுப் பயிற்சி மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும்.**

2025 இல் இதன் அனைத்து பணிகளும் ஆரம்பிக்கப்படும்.



## சிரேஷ்ட பிரஜைகள்

தற்போது சமூகத்தில் வேகமான மற்றும் சிக்கல்கள் காரணமாக சிரேஷ்ட பிரஜைகளுக்கு உரிய பாதுகாப்பினைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பிள்ளைகளுக்குச் சிரமமேற்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. பெரியவர்கள் மாத்திரமல்ல பிள்ளைகளும் சொல்லமுடியாத அனாதரவான நிலைமைக்கு ஆளாகின்றனர்.

இதன் காரணமாக நவீன சகல வசதிகளையும் கொண்டமைந்த சிரேஷ்ட பிரஜைகள் பராமரிப்பு மத்திய நிலையங்களை நாடு முழுவதும் நிர்மாணிப்பதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

சிரேஷ்ட பிரஜைகளுக்காக தேசியக் கொள்கை 2025 இல் திருத்தப்படும்.

சிரேஷ்ட பிரஜைகளுடைய சமூக, கலாசார வாழ்க்கையினை மேம்படுத்திக் கொள்வதற்காக பிரதேச செயலகங்கள் மற்றும் சமுதாய சபைகள் மூலம் பல்வேறு செயற்பாடுகள் ஒழுங்குசெய்யப்படும்.

## விசேட தேவைகளையுடைய சமூகம்

வலது குறைந்த நபர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சம்மேளனத்தின் 4 ஆவது உறுப்புரைக்கமைய அவ்வாறான நபர்களின் அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை முழுமையாக உறுதிப்படுத்துவதற்கான புதிய சட்டம் 2025 இல் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்படும்.

சைகை மொழி சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கும், விசேட தேவையுடைய நபர்களுக்கான தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அவர்களுக்கான கட்டட பிரவேசக் கொள்கை காலத்துக்கேற்ற வகையில் திருத்தப்படும்.

விசேட தொழில்வாய்ப்புக் கோட்டா ஒன்று அவர்களுக்காக ஒதுக்கப்படும்.



## அனைவருக்கும் மரியாதை

கவனத்திற்குள்ளாகாத, ஆனாலும் சிறு விடயங்களுக்காக சமூகத்தில் ஓரங்கட்டப்படும் சிறு சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட சிறிய சமூகக் குழுக்கள் நாடு முழுவதும் இருக்கின்றனர். இந்த சமூகக் குழுக்கள் ஒடுக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு காணப்பட்ட போதும் அவை தொடர்பாக சமூகம் கவனம் செலுத்துவதில்லை.

சமயம், மொழி, சாதி, ஆண் பெண் சமூக வேறுபாடு, அரசியல் மனப்பாங்கு அல்லது பிறந்த இடம் போன்ற காரணங்களின் அடிப்படையில் எந்தவொரு பிரஜைக்கும் வேறுபாடு அல்லது பாரபட்சம் ஏற்படாத சமுதாயமொன்றை நாம் உருவாக்குவோம்.

அரச சேவைக்கு சூரியோதயம்

2025ம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, அனைத்து அரச ஊழியர்களுக்கும், (ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும், திருத்தங்களுக்கு உட்பட்டு) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மாதாந்தம் 25,000 ரூபா வழங்கப்படும்.

அரச சேவையின் ஆகக் குறைந்த ஆரம்பச் சம்பளத்தை, 24% த்தால் குறைந்தபட்சமாக அதிகரித்து வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் மொத்தச் சம்பளம் ரூ.55.000மாகக் கருதப்பட்டு ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான அடிப்படைச் சம்பளம் அதற்கேற்ப ஒப்பிடப்படும்.

40 வயதுக்கு உட்பட்ட அரச ஊழியர்களின் சேவையின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு உதவும் பாடநெறிகளைத் தொடர்வதற்காக ஓராண்டு கால சம்பளத்துடன் லீவு வழங்கப்படும்.

அரச கொள்கைகள் மற்றும் நிர்வாக பல்கலைக்கழகம் ஒன்று தாபிக்கப்படும்.

திறமை அடிப்படையிலான பதவியுயர்வு முறை ஒன்று தயாரிக்கப்படும்.

ஒட்டுமொத்த அரச சேவை டிஜிட்டல் மயமாக்கல் முறைக்கு மாற்றப்பட்டு மிகவும் வினைத்திறன் மிக்க மற்றும் முறைசார்ந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு உதவும் வகையில் லெப்டொப், டெப், ஸ்மார்ட் தொலைபேசிகள் சலுகை அடிப்படையில் அரச ஊழியர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும்.

அரசின் புதிய வீடமைப்பு வேலைத்திட்டங்களில் வீடுகள் இல்லாத அரச ஊழியர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

பொருளாதாரம் உறுதியடையும்போது அதற்கமைய இடர்க்கடன் தொகையினை அதிகரிப்பதற்கும், சொத்து மற்றும் வீட்டுக் கடனை மீள பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வீட்டிலிருந்தவாறே கடமைகளை மேற்கொள்ளக்கூடிய சேவைகளுக்கு வீட்டிலிருந்தவாறே மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்படும்.

குறிப்பிட்ட மற்றும் முறையான இடமாற்ற முறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2025 இல் இப்பணிகள் ஆரம்பிக்கப்படும்.

# எதிர்வரும் வருடத்தில் ஒரு இலட்சம் புதிய தொழில்கள்...!

எமது பொருளாதார நடைமுறைகள் காரணமாக எதிர்காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் விளைவாக அதிகளவு புதிய தொழில்முயற்சிகள் உருவாகி பெருமளவு தொழில் வாய்ப்புக்கள் உருவாகும். அந்த நிலைமை ஏற்படுவதற்கு ஓரிரண்டு ஆண்டுகள் செல்லும் என்பதால் ஆரம்பமாக 2025 இல் 100,000 தொழில்கள் பின்வரும் விதமாக வழங்கப்படும்.

- வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்தன. எமது வங்குரோத்து நிலைமை இல்லாமற் போன காரணத்தால் அக் கருத்திட்டங்கள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவற்றுள் அநேகமான கருத்திட்டங்கள் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதனோடு இணைந்தவையாகும். கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே பல எண்ணிக்கையிலான புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும்.

- சாதாரண தரம் மற்றும் உயர்தரத்துக்கு மேல் கல்வி கற்பதற்கு அனுமதி மறுக்கப்படும் இளைஞர் யுவதிகளுக்காக சுற்றுலா, உற்பத்திக் கைத்தொழில் போன்ற தனியார் துறையுடன் இணைந்த புதியதொரு வேலைத்திட்டம் 2025 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்படும். இந்த இளைஞர் யுவதிகளுக்கு அந்த நிறுவனங்களில் தொழிற் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதுடன் வருடம் முழுவதும் அவர்களுக்கு அரசிடமிருந்து 35,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். தனியார் கம்பனிகளின் விருப்பத்துக்கேற்றவாறு அவர்களுக்கு அதனுடன் சேர்த்து மேலும் ஒரு தொகைப் பணம் வழங்கவும் வாய்ப்புகள் உள்ளன. பயிற்சியின் பின்னர் அவர்களுக்கு அவ்வந்த நிறுவனங்களிலேயே தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.

- சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும் சலுகைக் கடன்கள் காரணமாக நாடு முழுவதிலும் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகிக் கொண்டு வருகின்றது. வேலைவாய்ப்பின்றி இருப்போருக்கு தொழில்களைப் பெற்றுக் கொள்ள இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

- விவசாய நவீனமயப்படுத்தல் காரணமாக 2025 ஆம் ஆண்டு தொடக்கம் 2027 ஆம் ஆண்டு வரையான காலம் முழுவதும் பாரியளவில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

- இதற்கு மேலதிகமாக அரச சேவையில் ஓய்வுபெறுவதால் ஏற்படும் வெற்றிடங்களினால் மேலும் வேலை வாய்ப்புகள் ஏற்படுகின்றன.



# வெளிநாட்டுத் தொழில்கள்

எமது நாட்டுக்குத் தற்போது அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்வதில் பிரதான பங்கு வகிப்பது வெளிநாட்டில் பணி புரியும் தொழிற்படையினர் ஆகும்.

அவர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தைத் திருத்துவதற்குரிய பணிகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் புதிய சட்டத்தின் கீழ் வெளிநாட்டு ஊழியர்களுக்கு வீடமைப்புத் திட்டம், குழந்தை பராமரிப்பு மத்திய நிலையங்கள் போன்ற பல வசதிகள் கிடைக்கும்.

அவ்வாறே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாட்டு சந்தை பற்றிய தகவல் மத்திய நிலையம் ஒன்று தாபிக்கப்படும்.

வெளிநாடுகளில் முதியோர்களைப் பராமரிக்கும் சேவைத்துறையில் பெருமளவு வேலைவாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அத்துறைகளுக்குச் செல்வதற்கு ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் உரிய மொழித்தேர்ச்சியுடன் பயிற்றுவிக்கப்படுவார்கள்.

2025 இல் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.



## முறைசாராத தொழிற்சந்தை

அநேகமானவர்கள் முறையற்ற தொழிற் சந்தையில் தொழில் புரிகின்றார்கள். முச்சக்கரவண்டி சாரதிகள், தனியார் பஸ் ஊழியர்கள், நாட்டாமைமார்கள், தெரபிஸ்டுகள், சுத்தம் செய்யும் சேவையாளர்கள் போன்ற பல துறைகள் இதனுள் அடங்கும்.

இத்தகைய இனைவருக்காகவும் பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு 2025 இல் அறிமுகப்படுத்தப்படும்.

அவர்கள் அனைவருக்கும் தொழில் கௌரவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக, தரமான பயிற்சிகள் வழங்கப்படும். தெரபிஸ்டுகளுக்காக NVQ4 சான்றிதழைப் பெற்றுக்கொடுக்கும் பாடநெறிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான முச்சக்கர வண்டி சாரதிகள் கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கடன் மீளச் செலுத்துவதற்கு முடியாத நபர்கள் அவர்களின் கடன்களை மறுசீரமைப்பதற்காக அரச வங்கிகள் மூலம் வாய்ப்பு வழங்கப்படும். தனியார் வங்கிகளுடனும் கலந்துரையாடி இச் சலுகைகளை வழங்குவதற்கு நாம் நடடிவக்கை எடுப்போம்.



## நாட்டைப் பாதுகாத்தல்

முப்படைகளின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக **பாதுகாப்பு ஏற்பாடுகள் (விசேட) சட்டம்** மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டுக்கு பொருத்தமான வகையில் பாதுகாப்பு படையினரை நவீனமயப்படுத்துவதற்கான குழுவின் அறிக்கை எமக்கு கிடைத்துள்ளது. அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

முப்படையின் இராணுவத்தினருக்கு ஒரே தரம் — ஒரே ஓய்வூதியம் எனும் முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் படைவீரர்களின் ஓய்வூதியங்களுக்கிடையே காணப்படும் முரண்பாடுகளை இல்லாதொழிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைதிப் படையில் எமது இராணுவத்தினரது எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்.

பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட தயாரிப்புகளை முன்னெடுக்கும் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்பு வழங்கவுள்ளோம். அவற்றின் சேவைக்காக இளைப்பாறிய இராணுவ வீரர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

கடற்படை மற்றும் விமானப்படையை வளைகுடா கடலில் சேவைகளுக்காக ஈடுபடுத்துவதன் மூலம் சிறந்த வருமானத்தையும் அனுபவத்தையும் பெற்றுக்கொள்ள இராணுவத்தினருக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

வானில், கடலில், தரையில் எந்தவொரு இடத்திலாவது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாதவாறு முப்படைகளும் ஆயுத பலத்தில், அறிவில் மற்றும் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெறச் செய்யப்படுவர்.

## பொலிஸ் மறுமலர்ச்சி

நீதி நிர்வாகத்தின் அடிப்படை பாதுகாப்பு, பொறுப்புடன் கூடிய, இரவு பகல் பாராது செயலூக்கம் மிக்க, திறமையான, அச்சமற்ற மற்றும் நேர்மையான உத்தியோகத்தர்களைக் கொண்ட பொலிஸ் படை ஒன்றை அமைப்பதாகும்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் நிறுவனம் சார் மற்றும் அதற்குப் புறம்பான விடய அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்யும் நோக்கத்துடன் **பொலிஸ் பல்கலைக்கழகமொன்று** நிறுவப்படும். அதன் மூலம் சேவையில் இருக்கும்போது பட்டம், பட்டப்பின் படிப்பினைப் பெற்றுக் கொள்வதற்குப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

ஒழுக்கசீலமுள்ள சமூகமொன்றை உருவாக்கும் பணியில் பொலிஸ் சேவையின் வினைத்திறன் மற்றும் உயர்ந்தபட்ச சேவையினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பின்புலம் அமைக்கப்படும்.



## சிறைக்கைதிகளும் மனிதர்களே

**பெரும்பாலான சிறைச்சாலைகளில் நெரிசல் நிலைமை காணப்படுகின்றது. இது சிறைக் கைதிகளின் உள மற்றும் உடல் ரீதியான சுகாதாரத்திற்கு பாதகமாக அமையும். இதனால் தொடர்ந்தும் கைதிகளை சிறந்த மனிதர்களாக மாற்றி சமூகத்துடன் இணைக்கும் நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன.**

**எனவே நாம் சர்வதேச தரத்துக்கமைய புதிய சிறைச்சாலைகளை நிர்மாணிக்கவுள்ளோம்.**

**இதன் மூலம் சுகாதாரம், துப்பரவேற்பாடு, உணவு மற்றும் நலன்புரி சேவைகள் மேம்படுத்தப்படும். இதன் மூலம் கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து அவர்களை நல்வழிக்குட்படுத்தி சமூகத்துக்கு பயனுள்ளவர்களாக மாற்றும் வேலைத்திட்டம் பலப்படுத்தப்படும்.**

**பல்வேறு வகையில் தண்டனை பெற்றுள்ளவர்கள், குற்றவாளிகள் ரிமான்ட் மற்றும் நீண்ட கால சிறைவாசத்தை அனுபவிப்பவர்கள் மீளவும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.**

**சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

## சட்டவிரோத போதைப்பொருள் பாவனையை இல்லாதொழித்தல்

தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் பாவனை, விற்பனை, அவற்றிற்கு அடிமையாதல் அதிலிருந்த விடுபட முடியாமை போன்றவை பாரிய சமூக பிரச்சனைகளாகும். இந்த நிலைமையை முற்றாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

போதைவஸ்துக்களை இல்லாதொழித்தலில் இருந்து போதைக்கடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பது வரையிலான அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில், பரந்த அதிகாரமுடைய **போதைப்பொருள் இல்லாதொழிப்பதற்குக் கட்டளையிடும் தலைமையகமொன்றை** 2025 ஆம் ஆண்டில் தாபிப்பதற்கான புதியதொரு சட்டம் 2025 இல் அங்கீகரிக்கப்படும்.



# தாய்நாட்டை வெற்றிபெறச் செய்வோம்

**இரசனையுடன் கூடிய பிரசையொருவராலேயே ஒளிர்விடும் சமூகமொன்றை மலரச் செய்ய இயலும். அவர் கூருணர்வு கொண்டவராகவும் படைப்பாற்றல் மிக்கவராகவும் காணப்படுவார்.**

## கலாச்சார பிரசை

மொழி, இலக்கியம், அழகியற் கலைகள் பௌத்த போதனையுடன் வளர்க்கப்படதென்பது இரகசியமல்ல. சிறந்த ஒரு பிரசையை உருவாக்குவதற்கும் அப் போதனைகளை உபயோகப்படுத்த முடியும்.

அன்று தொடக்கம் இந்து, கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் மதங்கள் எமது நாட்டில் காணப்பட்டன. இலங்கை பல்லின மதங்கள் மற்றும் பல கலாச்சாரங்களைக் கொண்ட ஒரு நாடாகும். அந்த சமயங்கள் மற்றும் கலாச்சார அடையாளங்களுக்கு மதிப்பளித்து பக்தர்கள், வணக்கஸ்தலங்கள் உள்ளடங்கலாக இந்த பல்லின சமூகத்தைப் பாதுகாப்பதற்குப் பொறுப்புடனும் கடமையுணர்வுடனும் கட்டுப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவையில் புதிய அகழ்வுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பெறுமதிமிக்க மரபுரிமைகள் பற்றிக் கற்றறிந்து புதியதோர் இலங்கைக்கு அவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய பயன்கள் பெற்றுக்கொள்ளப்படும். கீழைத்தேய உலகின் முக்கிய அரச நிர்வாக கோட்பாடுகளுக்குள் தண்ட மற்றும் பேதத்தைக் கைவிட்டு சாம மற்றும் தான ஆகியவற்றை மதித்தல் எமது கடப்பாடாகும். அஹிம்சை, கருணை, என்பன எமது ஜீவ குணமாகும். மேலைத்தேய உலகிலிருந்தும் எடுக்கக்கூடிய நற்கருத்துகளினாலும் எமது நாடு போஷிக்கப்படுகிறது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி பௌத்த பண்பாடுகள் தொடர்பாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அருங்காட்சிகமொன்றை உருவாக்குதல் எமது ஒரு அபிலாஷையாகும்.

திரிபீடகத்தைக் கற்பதற்காக செயற்கை நுண்ணறிவு, புதிய தொழில்நுட்ப அறிவின் மூலமாக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். மஹாவிகாரை பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல் எமது இன்னொரு பிரதான நோக்கமாகும்.

ஆரண்யங்களில் வசிக்கும் பிக்குமார்களுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நிதியமொன்று ஏற்படுத்தப்படும். பிரிவெனாக்களின் கல்வி விருத்தி செய்யப்படும். துறவிகளாவதற்கு வருகின்ற பிக்கு அன்னையர்களுக்கு ஆன்மீக முன்னேற்றம் ஏற்படக்கூடியவாறு உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படும்.

இந்து சமயம் அநுராதபுரம் - பொலன்னறுவை யுகங்களில் இருந்தே இலங்கையில் பரவியது. நாட்டில் இந்து ஆலயங்கள் முன்னேற்றப்படும்.

அதன் கீழ் மன்னார் திருக்கேதீஷ்வரம், யாழ்ப்பாணம் நகுலேஷ்வரம், சிலாபம் முன்னேஷ்வரம் ஆகிய கோயில்களை அடிப்படையாகக் கொண்டு தெற்கின் கைலாய கோயில் யாத்திரை அறிமுகப்படுத்தப்படும் என்பதுடன் திருகோணமலை திருக்கோணேஷ்வரம், தெற்கின் கைலாய கோயில் யாத்திரையின் பிரதான இந்து மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும்.

இந்து மதத் தலைவர்களுடன் கலந்துரையாடி இலங்கையிலுள்ள இந்து சமயத்தை முறையாக கடைப்பிடிப்பதற்குரிய கல்வி நிலையமொன்று நிறுவப்படும்.

கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க பிள்ளைகளுக்கு, கிறிஸ்தவ சூழலொன்றுக்குள் கிறிஸ்தவத்தைக் கற்பிப்பதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும். கிறிஸ்தவ கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் செமினரி நிறுவனங்கள், இடங்களுக்கு அரச உதவிகள் மற்றும் ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும். மடு தேவாலயம் உள்ளிட்ட முக்கியமான மதத்தலங்களைச் சுற்றி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து பக்தர்களுக்குத் தேவையான வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்.

இஸ்லாம் மதக் கல்விக்குரிய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு மதரஸாக் கல்வி அபிவிருத்தி செய்யப்படும். முஸ்லிம் உடலங்களை தகனம் செய்தல் போன்ற விஞ்ஞான ரீதியற்ற மற்றும் மதங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் கடந்த காலங்களில் இடம்பெற்றன. இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு முகம் கொடுத்த அனைத்து குடும்பங்களுக்கும் நட்டயீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் ஒருபோதும் ஏற்படாதவாறு புதிய சட்டங்கள் 2025 முதல் அறிமுகப்படுத்தப்படும். எந்தவொரு மதத்திற்கோ இனத்திற்கோ தமது கலாச்சார அடையாளங்களுக்கு மற்றும் மத அனுட்டானங்களுக்கு தடைகளை ஏற்படுத்தாத சமூக சூழல் ஒன்று தாபிக்கப்படும்.

அனைத்து மத வழிபாட்டுத்தலங்களுக்கும் சூரிய மின்னுற்பத்தித் தொகுதிகள் வழங்கும் வேலைத்திட்மொன்று கொண்டுவரப்படவுள்ளது.

## அழகியற் கலையை மெருகூட்டல்

எந்தவொரு நாட்டிலும் மனிதனின் ஆன்மீக வாழ்க்கை போஷிக்கப்படுவது அந்நாட்டின் கலைகளினாலும் கலாச்சாரத்தினாலுமாகும்.

எமது நாடு உடரட்ட- பஹதரட்ட- சபரகமுவஈ பரதம் ஆகிய நர்த்தனங்களினால் போஷிக்கப்பட்ட நாடாகும். மேலைத்தேய மற்றும் கீழைத்தேய இசைகள் போன்றவற்றினால் போஷிக்கப்படுவதுடன் பாரம்பரிய ஓவியக் கலைஞர்கள், சிற்பக் கலைஞர்கள் மற்றும் நவீன ஓவியக் கலைஞர்கள் ஆகியோரினால் போஷிக்கப்பட்ட நாடாகும்.

எமது கலாசாரத்தின் அடையாளங்களைப் பாதுகாக்கும் இந்த கலைஞர்களை சர்வதேச தரத்துக்கு கொண்டு செல்வதற்கு நாம் நடவடிக்கைகள் எடுப்போம்.

எமது இலக்கியவாதிகள் மத்தியில் உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களும் இருக்கின்றனர். அவர்களைப் பாதுகாப்பது மற்றும் ஊக்குவிப்பது அரசின் கடமையாகும்.

ஆனந்த குமாரசுவாமி மாவத்தையை கேந்திரமாகக் கொண்டு சர்வதேச கலைகள் மற்றும் கலாசார கேந்திர நிலையமொன்று நிறுவப்படும். இதற்காக கொழும்பு தாமரைத் தடாகம், ஜோன் டீ சில்வா கலையரங்கு, கலாபவனம், விஞ்ஞான அருங்காட்சியகம், மகாவலி கேந்திர நிலையம் மற்றும் புதிய நகர மண்டபம் ஆகியவை ஒருங்கிணைக்கப்படவுள்ளது. உள்நாட்டுக் கலைஞர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் கலாச்சார துறையில் சர்வதேச வளர்ச்சியை பெற்றுக்கொள்வதற்கும் தேவையான பின்புலம் இந்த கேந்திர நிலையத்தில் உருவாக்கப்படும். இந்த கேந்திர நிலையத்துக்கு **ஆனந்த குமாரசுவாமி சர்வதேச கலைகள் மற்றும் கலாச்சார நிலையம்** என்ற பெயர் வழங்கப்படும்.

இந்த கேந்திர நிலையத்துடன் இணைந்த வகையில் **தெற்காசிய கலாச்சார கேந்திர நிலையம்** நிறுவப்படும். 2025 இல் இப்பணிகள் ஆரம்பிக்கப்படும்.

கொழும்பு காலி முகத்திடலில் அமைந்துள்ள பழைய இராணுவ வைத்தியசாலைக் கட்டடத்தை **நவீன கலைப் படைப்பாற்றல் அரும்பொருட் காட்சிக் கூடத்திற்காக** ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பணிகள் 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

பாரம்பரிய மற்றும் நவீன நடனங்கள், இசை மற்றும் பாடல்கள், கலைநுட்பங்கள், சிற்பக் கலைகள், சமயக்கலை, அலங்காரக்கலை, வடிவமைப்புக்கலை, உடையலங்காரக்கலை, சிகையலங்காரக்கலை என்பவற்றுக்கும் இந்த கேந்திர நிலையத்தில் வசதிகள் வழங்கப்படுவதுடன் மறுபுறத்தில் தொழில் வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படும். அதனுடன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று நூல் வெளியீடுகள் ஈ-புக் தொழில்நுட்பத்துடன் பெரும் போராட்டத்தில் ஈடுபடுகின்றது. நூல்களை அச்சிடுவதற்கான வசதிகளை மேம்படுத்தி நூலாசிரியர்கள், வெளியீட்டாளர்கள் ஆகியோரின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேடை நாடகங்கள், பலே, ஒபேரா, சைகை நர்த்தன கலை போன்றவற்றின் முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சார்க் கலாசார நிலையத்தை உயிரோட்டம் பெறச் செய்து சார்க் பிராந்தியத்தின் கலை கலாச்சாரத்திற்கான அடித்தளம் இடப்படும்.

ஜனரஞ்சகமான கலாச்சாரத்தை விரும்பும் இளைஞர் யுவதிகளுக்காக பொப் இசை மற்றும் மேலைத்தேய நடனங்களுக்கான நிலையம் ஒன்று உருவாக்கப்படும்.

மாவட்டங்கள் தோறும் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய கலையரங்கம் ஒன்று நிர்மாணிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது நடைமுறையில் உள்ள கலாச்சார நிலையங்களை ஒருங்கிணைத்து வருடாந்த நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

டவர் ஹோல், எல்பின்ஸ்டன் கலையரங்கம் உட்பட கொழும்பு நகரில் உள்ள அரசாங்கத்துக்கு உரித்தான அனைத்து கலையரங்குகளும் ஓர் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டு அவற்றின் மூலம் உச்சப் பயனைப் பெறக்கூடிய வகையில் அவை அபிவிருத்திச் செய்யப்படும்.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நடைமுறையில் சர்வதேச போக்குகளுக்கு ஏற்றவாறு திரைப்பட அபிவிருத்தி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும். அதற்கு "**பிலிம் ஸ்ரீலங்கா**" என்ற பெயர் வழங்கப்படும். இதன் மூலம் இலங்கையின் திரைப்படங்களை சர்வதேச தரத்திற்கு மற்றும் டிஜிட்டல் மேடைக்கு கொண்டு செல்லும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். சினிமா அபிவிருத்திக்கான பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரம் கிடைக்கும் சட்டமூலம் தயாரித்தல் தற்போது இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது. இது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் திரைப்படத் துறையில் எந்தவொரு வியாபார செயற்பாட்டுக்கும் அரச தலையீடு ஏற்பட மாட்டாது. ஒழுங்குபடுத்தல் பணிகள் மாத்திரம் இடம்பெறும். இச்சட்டம் 2025 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தணிக்கை சபையை முற்றாக இல்லாமல் செய்து, **நாடக மற்றும் சினிமா துறையை வகைப்படுத்தும் சபையொன்றை** நிறுவுவதற்கான நகல் சட்டமூலம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. வகைப்படுத்தல் சான்றிதழைப் பெற்ற எந்தவொரு கலைப் படைப்புக்கும் குற்றவியல் கோவையின் கீழ் குற்றம் சுமத்த முடியுமான அனைத்து வாய்ப்புக்களும் அந்த நகல் சட்டமூலத்தால் தடுக்கப்பட்டுள்ளது. 2025 இல் இச்சட்டம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். 2025 இல் இச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

## சிறந்த ஊடக சூழல்

மிகவும் உணர்வுபூர்வமான சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஏற்ற வகையிலான புதிய ஊடகம் தேவைப்படுகின்றது.

தேசிய ஊடகத்துறைக்கான கொள்கைத்திட்டம் ஒன்றைத் தயாரித்து மனித நேயமுள்ள மற்றும் ஒழுக்கமுள்ள சட்டங்களை மதிக்கும் ரசனை மிக்க புத்திகூர்மையான சமுதாயம் ஒன்றுக்கு இதன் மூலம் அடித்தளம் ஒன்று இடப்படும்.

ஊடகவியலாளர்கள் மற்றும் சுதந்திர எழுத்தாளர்கள் ஆகியோரை பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஊடகவியலாளர்கள் மற்றும் சுதந்திர எழுத்தாளர்களை வலுவூட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஊடகவியலாளர்களுக்கான உயர் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவும் பணிகள் 2025 இல் ஆரம்பிக்கப்படும்.

பிராந்திய ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை படிப்படியாக தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட பாதுகாப்பான வெளிப்படைத் தன்மை கொண்ட மிகவும் ஞானம் மற்றும் அறிவுள்ள ஊடக சுற்றுச்சூழலை உருவாக்கக்கூடிய வகையில் இலத்திரனியல் ஊடக ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவொன்று நிறுவப்படும்.

# ஒன்றுபட்ட இலங்கை

தெற்கின் பிள்ளைகள் சிரிக்கும் போது சிரிப்போம் நாம் இலங்கை
வடக்கின் பிள்ளைகள் சிரிக்கும் போது சிரிப்போம் நாம் இலங்கை
தெற்கும் வடக்கும் கைகோர்க்கும் போது நாம் இலங்கை
முழு நாட்டினதும் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாய் சிரிப்போம் நாம் இலங்கை

## ஒரே தேசம்...

எமது நாட்டில் பல்லின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் இலங்கையின் பிரஜைகள். அவர்கள் அனைவரும் சிறப்பாக வாழ்வதற்கு உரிமையுடையவர்கள். நாட்டின் அரசியலானது அனைத்து இன மக்களுக்கும் சிறந்த வாழ்க்கையொன்றை உருவாக்கிக் கொடுக்கும் அபிலாஷையுடன் பயன்படுத்தப்படவேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக எமது நாட்டில் வாழும் அனைத்து இன மக்களினதும் எதிர்பார்ப்புகள் சிதறடிக்கப்பட்டன. முன்னோக்கிச் செல்ல அவர்களுக்கு இருந்த வாய்ப்புகளும் இல்லாமல் போயுள்ளன.

தற்போது நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து எமது எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வதற்கான பாரிய சவாலை எதிர்நோக்கியுள்ளோம். இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் எமது எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ளவேண்டும்.

தமிழ் மொழியில் பேசுவதன் காரணமாக எந்தவொரு பிரஜையையும் சிங்கள் மொழி பேசும் சமூகத்திலிருந்தோ அல்லது சிங்களம் பேசுவதன் காரணமாக தமிழ் அல்லது முஸ்லிம் சமூகத்திலிருந்தோ எவரையும் ஒதுக்கக் கூடாது. இலங்கை வாழ் அனைத்து இன மக்களுக்கு மத்தியில் சிறந்த உறவுமுறை காணப்படுகிறது. அதனை மேலும் வலுவூட்டும் வகையில் அனைவரும் நண்பர்களாக வாழக்கூடிய பின்புலத்தை எமது அரசு ஏற்படுத்திக்கொடுக்கும் என்பதை நாம் உறுதியாக கூறுகின்றோம்.

அனைத்து இன மக்கள் மத்தியிலும் நல்லிணக்கம், சுபீட்சம், செழிப்பு மற்றும் சௌபாக்கியம் உட்பட அவர்களது அனைத்து தனித்துவத்தையும் வாழ்க்கை முறைகளையும் பேணக்கூடிய ஓர் சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுப்போம். விசேடமாக வடக்கு கிழக்குப் பிராந்திய சமூக, பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள் மற்றும் கல்வி சார் பிரச்சனைகளுக்கும் சமூகப் பிரச்சனைகளுக்கும் சிறந்த தீர்வு வழங்கப்படும்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் மக்கள் இழந்துள்ள காணிகள் தொடர்பான பிரச்சனைகள் பெரும் சிக்கலான ஓர் விடயமாகும். காணிப் பிரச்சனைகளுக்கு ஓர் நிலைபேறான தீர்வினை வழங்குவதற்காக தேசிய காணிகள் ஆணைக்குழுவொன்றை நாம் நியமிக்க நடவடிக்கை எடுப்போம்.

யுத்தத்தை அடுத்து புதிய வாழ்க்கையை தேடிச்செல்லும் வடக்கு கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் உள்ளன.

இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக

- உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
- காணாமற் போனவர்கள் தொடர்பான நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும்.
- புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் எல்ரீரீஈ உறுப்பினர்களுக்கு சுயதொழில் ஆரம்பிப்பதற்கான நிதியுதவி வழங்கப்படும்.

## மாபெரும் சக்தி...

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் எமது நாட்டில் அளப்பரிய பணிகளை ஆற்றவேண்டியுள்ளது. இதனை அரசாங்கத்தினால் மாத்திரம் தனித்து செய்ய முடியாது. இதனால் மத்திய அரசாங்கத்துடன் மாகாண அரசுகளும் ஒன்றிணைந்து இந்தச் சுமையை ஏற்க வேண்டும்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக 2024 இல் நாம் முன்வைத்த முன்மொழிவின் பிரகாரம்,

1. அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படும். மாகாண சபைகளுக்குரிய எனினும் மத்திய அரசாங்கத்தினால் கையகப்படுத்தியுள்ள முதலாம் அட்டவணையில் உள்ள அதிகாரங்களை மீண்டும் மாகாண சபைகளுக்கு வழங்குவோம்.
2. மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவது தொடர்பான தீர்மானம் எடுக்கும் அதிகாரம் புதிய பாராளுமன்றத்துக்கு வழங்கப்படும்.
3. கட்சித் தலைவர்களால் அங்கீகரித்த 3ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்படும்.

தேசிய கொள்கைகள் சட்டகத்துக்கு ஏற்புடைய வகையில் மாகாணத்தில்

- பாடசாலைக் கல்வி
- தொழிற்பயிற்சி
- பட்டம் வழங்கும் நிறுவனங்கள் (தேவைப்படின் எதிர்காலத்தில் பல்கலைக்கழக மட்டத்துக்கு தரம் உயர்த்தக்கூடியவாறு)
- மாகாண சுற்றுலா அபிவிருத்தி
- விவசாய நவீனமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள்

போன்ற பணிகளை நிறைவேற்றும் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவோம்.

இப் பணிகள் தொடர்பான சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்.

மாவட்ட அபிவிருத்தி சபைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பல்வேறு கருத்துகளுக்கு மத்தியில் ஓர் சிறந்த நாடாக சிங்களம், தமிழ், முஸ்லிம், மலே மற்றும் ஆதிவாசிகள் உட்பட எந்தவோர் இனக்குழுமத்துக்கும் சுயாதீனமாக தமது தனித்துவத்தைப் பேணிக்கொண்டு செயற்படும் உரிமை வழங்கப்படும். மத்திய அரசாங்கம் தொடக்கம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கும் சட்டங்கள் உருவாக்கப்படும்.

2025 ஆம் ஆண்டிற்குள் உள்ளூராட்சி முறையில் மாற்றங்களைச் செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். தற்போது செயற்பட்டுவரும் நகர சபைகளை மறுசீரமைத்து அவை மாநகர சபைகளாக மாற்றியமைக்கப்படும். பிரதேச சபைகள் மற்றும் மாநகர சபைகள் ஊடாக அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் புதிய முறையொன்று தயாரிக்கப்படும்.

## இலங்கையை வெற்றியடையச் செய்வோம்

இலங்கையின் எதிர்காலத்தை மிகவும் பலமுள்ளதாகக் கட்டியெழுப்பவதற்கு கட்டாயம் செய்யவேண்டிய பல மறுசீரமைப்புக்கள் உள்ளன.

ஜனாதிபதி தேர்தலையடுத்து வரும் பாராளுமன்ற தேர்தலின் பின்னர் ஒரு வருட காலத்துக்குள் புதிய அரசியல் யாப்பொன்றை தயாரிக்கும் பொறுப்பினை நான் பாராளுமன்றத்துக்கு வழங்குவேன்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதா இல்லையா என்ற தீர்மானம் புதிய பாராளுமன்றத்தினால் எடுக்கப்படும்.

- **தேர்தல் முறைகள்**

  தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பிரியசாத் டெப் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் புதியதொரு தேர்தல் முறையினை அறிமுகம் செய்யும் பணியும் புதிய பாராளுமன்றத்தால் முன்னெடுக்கப்படும்.

  ஐரோப்பாவில் அரசியல் கட்சிகளின் உள்ளக நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடன் ஓர் உயர் மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தேர்தல் செலவுகள் தொடர்பாகவும் ஏனைய கட்சிகளின் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

- **பாராளுமன்ற தர நிர்ணய சட்டம்**

  பாராளுமன்ற தர நிர்ணயம் தொடர்பான சட்டம் நிறைவேற்றப்படும். அந்த சட்டத்தில் குறிப்பிடப்படும் தர நிர்ணயங்களை பாரதூரமான முறையில் மீறும் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாராளுமன்றத்தில் இருந்து நீக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் இதற்கான சட்டத்தில் உள்ளடக்கப்படும்.

  மக்களின் வாக்குகளினால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் அரசுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இல்லாதொழிக்கும் சட்டங்கள் உருவாக்கப்படும்.

- **இரண்டாவது மந்திரி சபை**

  சட்டவாக்கப் பேரவையின் அறிக்கைக்கு அமைய மாகாண சபை பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இரண்டாவது மந்திரி சபை நிறுவப்படும். மாகாண சபைகளுக்கு அரசியலமைப்பு மற்றும் சட்டங்களினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை மேற்பார்வை செய்யும் அதிகாரம் இந்த மந்திரி சபைக்கு வழங்கப்படும்.



# பிரஜைகளை வலுவூட்டுதல்

மிகவும் பலம் பொருந்திய சமுதாயம் ஒன்றின் மூலம் நாட்டுக்கு பெருமளவு பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும் எமது நாட்டில் அதற்கான அடித்தளத்தை இடும் சட்டத்திட்டங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. இதனால் பிரஜைகளை வலுவூட்டும் வகையில் நாம் புதிய சட்டதிட்டங்களையும் நிறுவனங்களையும் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

- **சமூக நீதிக்கான ஆணைக்குழு**

நேரடியாக மக்களின் குரலை செவிமடுக்கும் அபிலாஷையுடன் சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படுவதையும் வெளியேற்றப்படுவதையும் தடுக்கும் வகையில் சமூக நீதி நியாயத்துக்கான ஆணைக்குழு நிறுவப்படும்.

- **மக்களுக்கான சட்டமூலங்கள்**

தற்போது மக்களின் இறைமையை நடைமுறை ரீதியில் பரீட்சித்துப் பார்க்கும் பிரதான அம்சமாக ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் என்பன விளங்குகின்றன.

நாங்கள் அறிமுகப்படுத்தவுள்ள மக்களுக்கான இந்தப் புதிய சட்டமூலங்கள் மூலம் மக்களுக்குப் பாராளுமன்றத்தில் முன்மொழிவுகள் மற்றும் சட்டமூலங்கள் என்பவற்றை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. இதன் மூலம் மக்களுக்கு சட்டவாக்க நடவடிக்கைகளில் நேரடியாகவே கலந்துகொள்ள முடியும்.

எமது நாட்டில் ஜனநாயக அரசியல் முறைக்கு பெரும் வலுவூட்டலை இது வழங்குகின்றது.

பிரதிநிதித்துவ ஜனநாயக அரசியல் பயன்பாட்டின் ஊடாக ஜனநாயக முறைகளை நேரடியாக நடைமுறைப்படுத்தும் நாடுகளின் பட்டியலில் எமது நாடும் உள்ளடங்கும் என்பதில் ஐயமில்லை.

- **ஜனசபை**

பிரதேச ரீதியில் கிராமப்புற மக்களை அபிவிருத்தி தொடர்பாக தீர்மானமெடுக்கும் செயற்பாட்டுக்குள் அவர்களை நேரடியாக பங்குகொள்ளச் செய்வது ஜனசபைகளின் நோக்கமாகும். ஏற்கனவே இதற்கான முன்னோடி கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றினூடாக பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடுத்து நாட்டில் உள்ள சுமார் 14,002 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் உள்ள 50,000 க்கும் அதிகமான கிராமங்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இந்த ஜனசபைகள் நிறுவப்பட்டுள்ளன.

## இனி நாங்கள் ஓர் புதிய நாட்டை உருவாக்குவோம்….!

எமது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம் இலங்கையை வெற்றியடையச் செய்வதாகும்.

கட்சிகளையோ அல்லது நபர்களையோ வெற்றியடையச் செய்வது எமது நோக்கமல்ல.

ரணில் தனிக் கட்சியொன்றையோ தனி நபர் ஒருவரையோ பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவரல்ல.

அவர் ஒட்டுமொத்தமான இலங்கையை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

இன, மத பேதமற்ற, வேறெந்த விதமான பாகுபாடுமற்ற ஓர் இலங்கையை உருவாக்குவதே நோக்கமாகும்.

இது எம் அனைவரினது எதிர்காலமாகும்.

இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ரணிலுடன் இணையுங்கள்.

ஆம்!

அப்போது எமக்கு எதிர்காலத்தைக் கட்யெழுப்ப முடியும்!”

எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியின் பங்குதாரர்களாகுங்கள்.

எங்களுடன் இணையுங்கள்.



ஆம் இத் தேர்தலில் ரணில் வெற்றியடைவார்.

அது எவ்வாறு?

நாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் வரிசைகளைத் தான் பார்த்தோம். வரிசைகளில் தான் காலங்கள் கடந்தன. வீடுகள் இருளில் மூழ்கின. தொழில் செய்ய முடியவில்லை. கையில் பணம் இருக்கவில்லை.

ஆனாலும் நாம் இப்போது மகிழ்ச்சியுடன் புன்னகையுடன் வாழும் ஒரு நாட்டைக் காண்கின்றோம். மின்சாரத்தால் மிளிரும் ஒரு நாடு. தொழில் ஒன்றைச் செய்து கையில் பணத்துடன் வாழ முடியுமான ஒரு சூழல்.

இந்த மாபெரும் மாற்றத்தைச் செய்தவர் ரணில்.

ரணில் சவால்களைப் பொறுப்பேற்ற ஒரு தலைவர். ஆரம்பித்த வேலையை நிறைவு செய்த, நிறைவு செய்யும் ஒரு தலைவர்.

மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை அவர் இற்றைக்கு 23 ஆண்டுகளுக்கு முன்னர் துவங்கி வைத்தார்.

அன்று முதல் அவர் இதற்காக பாடுபட்டார். அவருக்கு மேலால் இருந்த ஜனாதிபதிகள் இதற்கு அனுமதி வழங்கவில்லை. ரணிலும் தனது பணியைக் கைவிடவில்லை. மக்களுக்கு காணி உறுதி மாத்திரம் அன்றி வீட்டு உரிமையும் தற்போது கிடைக்கிறது.

ஆகவே நாட்டை மேல் நோக்கி உயர்த்தி வைக்கவும், இன்றை விட எமது வாழ்க்கையை சிறப்பாக்குவதற்குமான பலம் ரணிலிடம் தான் உள்ளது.

ஏனைய அபேட்சகர்கள் ஜனாதபதி பதவிக்காக ஒருவருக்கொருவர் போட்டி போடும் போது ரணில் அதில் கலந்துகொள்வதில்லை.

ரணில் ஒவ்வொரு நபருக்கும் எதிரான போட்டியில் இல்லை.

ரணிலின் போட்டி ஏழ்மைக்கு எதிரானது. வேலையின்மைக்கு எதிரானது. வறுமைக்கு எதிரானது. போசாக்கின்மைக்கு எதிரானது.

ரணில் ஜனாதிபதிப் பதவியை வெற்றிகொள்வதற்கு போட்டியிடவில்லை.

ரணில் போட்டியிடுவது இந்த நாட்டு இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்காக.

ரணில் போட்டியிடுவது நாட்டை வெற்றியடைச் செய்வதற்காக.

ரணில் போட்டியிடுவது இலங்கையை முழுமையாக அபிவிருத்தியடைந்த நடாக மாற்றுவதற்காக.

ஆகவே தான் ரணில் வெற்றியடைவார்.

ஆகவே தான் ரணிலை தோற்கடிக்க எவராலும் முடியாது போகும்.

ranil2024.lk

රනිල් වික්‍රමසිංහ
ரணில் விக்ரமசிங்ஹ
**Ranil Wickremesinghe**